பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 02 வியாழக்கிழமை (17.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 021

# ஜனாதிபதித் தேர்தலில் வன்முறை மிக மோசமாக வெடிக்கலாம்

## 'டவ்ரல்' கண்காணிப்பு அமைப்பு எச்சரிக்கிறது

கொழும்பு, டிசம்பர் 17

**யுத்த வெற்றிக்கு உரிமை கோரிப் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் கடும் சவாலை எதிர்கொள்வதாலும், அரச கட்டமைப்புகள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமையாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், வன்முறை மிகுந்ததாகவும் அமைதியற்றதாகவும் அமையலாமென 'சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான ஜனநாயக செயற்பாடு' ('டவ்ரல்') எனும் சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.**

கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை வழங்கப்படாததையும் சுட்டிக்காட்டியுள்ள இந்த அமைப்பு, தேவையற்ற தலையீடுகள் இன்றி சுதந்திரமாக இந்த மக்கள் வாக்களிப்பதற்கான அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெறுகின்றதா என்பதை

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை தடுக்க முயற்சியாம்!

கொழும்பு, டிசெ.17

ஜெனரல் சரத் பொன்சேகா இன்று வேட்புமனுத்தாக்கல் செய்வதைக் குழப்புவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார். தேர்தல் ஆணையகத்திற்கு பௌத்த மதகுருமாரை அழைத்து வந்து சரத் பொன்சேகா உரிய நேரத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்வதைக் குழப்புவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (சி)

## யாழ்.வருவதற்கு ஈரப்பெரியகுளம் சோதனைச்சாவடியில் நாள் கணக்கில் கால்கடுக்க காத்துநிற்கும் 5,000 பயணிகள்!

வவுனியா,டிசெ.17

வவுனியாவிலிருந்து யாழ்ப்பணத்துக்கு வருவதற்கென பயண அனுமதிக்கான 'டோக்கன்' பெறுவதற்காக கடந்த சில நாள்களாக சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் வவுனியாவிலுள்ள ஈரப் பெரிய குளம் சோதனைச் சாவடியில் தவமிருக்க வேண்டிய பரிதாப நிலை காணப் படுகிறது.

பயணிகள் அதிகாலை ஒரு மணிக்கு முன்பே சோதனைச் சாவடிக்குச் சென்று வரிசையில் நிற்கவேண்டிய நிலை காணப்படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து தமது உறவினர்களைச் சந்திக்க மற்றும் ஏனைய தேவைகள் காரணமாக, அதுவும் தற்பொழுது பாடசாலை விடுமுறை நாள்களாதலால் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலர் குடும்பமாக வெளிமாவட்டங்களுக்குச் சென்று, அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வருவதற்காகவே இவ்வாறு கால் கடுக்கக்காத் திருக்கிறார்கள். வவுனியாவில் கடும் மழை பெய்து வருகிறது. அதன் மத்தியிலும் பயணிகள் பிற்பகல் வரை மழையிலேயே நனைய வேண்டிய நிலையும் காணப்படுகிறது. அவர்கள் தங்கு வதற்கு, ஒதுங்குவதற்கென இடவசதி கூட ஏற்பாடு

(20ஆம் பக்கம் பார்க்க)

## இடியுடன் கூடிய மழை இன்றும் தொடரும் சாத்தியம்

கொழும்பு,டிசெ.17

நாட்டின் வடபகுதியில் காலநிலை பாதிக்கப்பட்டு குழப்பமடைந்து காணப்படுவதால் இன்றும் அங்கு பல பிரதேசங்களிலும் காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என கொழும்பு வளிமண்டலத் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அடுத்த 36 மணித்தியாலயங்களில் காலநிலை தொடர்பாக நேற்று மாலை 4 மணிக்கு விடுத்த அறிக்கையில் வளிமண்டலத் திணைக்களம் இத்தகவலைத் தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம், வடபகுதியில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் செயலகப் பிரதேசம் பாதுகாப்பு வலயமாகிறது போக்குவரத்துக்கு இன்றிலிருந்து மாற்று ஒழுங்குகள்

கொழும்பு, டிசெ. 17

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் பணிகள் இன்று இடம் பெறவுள்ள நிலையில் தேர்தல் செயலகத்தை அண்மித்த பகுதியில் விசேட போக்குவரத்து நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேர்தல் செயலகப் பிரதேசம் இன்றிலிருந்து அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் கருதப்பட்டு அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஐ.என்.கருணாரட்ண தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வரும் இ.போ.ச. பஸ் சேவையில் ஆசனங்களுக்கான பதிவுகள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 17

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்ய இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் ஆசனப்பதிவு அதிகரித்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் உள்ள ஆசனப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது என இ.போ.சபை தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 11 மணிவரை 500இற்கும் மேற்பட்ட ஆசனப் பதிவுகள் இடம் பெற்றன என்று இ.போ.சபையின் பிரதிப் பொது

(20ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோவில் பிரதேசத்தில் குண்டு வெடிப்பு!

திருக்கோவில், டிசெ. 17

அம்பாறை, திருக்கோவில் சவக்காலைப் பகுதியில் நேற்றுமாலை 6.15 மணி யளவில் வான் ஒன்றில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆரம்ப விசாரணைகளிலிருந்து இந்த வான் . ஏறாவூர்ப் பகுதியைச் சேர்ந்த ரவிச் சந்திரன் என்பவருடையது எனத் தெரிய வந்துள்ளது.மேற்படி சம்பவத்தில் ஏற்பட்ட உயிரி ழப்புக்கள் மற்றும் சேத விவரங்கள் பற்றி இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (சி)

## கிறிஸ்மஸ் தீவு அகதி முகாமை மூடுக; சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

நியூயோர்க்,டிசெ.17

இலங்கையர்கள் உட்பட்ட அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் தீவின் அகதி முகாமை மூடிவிடுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை ஆவுஸ்திரேலியாவை கோரியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின், அகதிகளுக்கான இணைப்பாளர் கிரஹம் தோம், கிறிஸ்மஸ் தீவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பிய நிலையிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்த முகாமில், அதிகளவான அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## விக்கிரமபாகுவின் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் எம்.பி. பங்கேற்பு

கொழும்பு, டிசெ. 17

புதிய இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண இன்று தமது முதலாவது பிரசாரக் கூட்டத்தை ஆரம்பிக்கின்றார். இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியவருமான சிவாஜிலிங்கம் பங்கேற்று உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனுத் தாக்கல் இன்று மொத்தம் 23 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

கொழும்பு, டிசெ.17

எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்கும் நடவடிக்கைகள் இன்று கொழும்பு இராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் காலை 9மணிமுதல் முற்பகல் 11 மணிவரை இடம்பெறவுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ஐந்து சுயேச்சை வேட்பாளர்கள் உட்பட மொத்தம் 23 பேர் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு முன்னேற்பாடாக வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்றுடன் முடிவடைந்தன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா. சபை தனித்து விசாரணை

### அமெரிக்கத் தரப்பு வெளியிடும் தகவல் இது

நியூயோர்க், டிசெ. 17

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளது. என்று தெரிவித்துள்ள அமெரிக்கா, இதற்கு முழு ஆதரவையும் தான் வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உதவி அமைச்சர் பிலிப் ஜே. குரோலி கடந்த செவ்வாய்க்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார்.இலங்கையில் சரணடைய முன்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பத்திரிகையாளர் திஸநாயகத்தை பிணையில் விடுவிக்க அரசு ஆட்சேபிக்காது என அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

இருபது வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் சிறையில் வாடும் பத்திரிகையாளர் திஸநாயகம் தொடர்பில், அத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவரைப் பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை என சட்டமா அதிபர் சார்பில் நேற்று நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

திஸநாயகத்தின் சார்பிலான மேன்முறையீட்டு மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் சரத் டீ ஆப்ரூ, உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விஜித மணல்கொட இத்தகவலை நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

திஸநாயகம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அனில் சில்வா ஆஜரானார்.

மேற்படி மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்வதற்கான - உகந்த - திகதியைத் தீர்மானித்து சிபார்சு செய்யும்படி மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் கட்டுரை எழுதி வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் திஸநாயகத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் இருபது ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளமை தெரிந்ததே. (அ-சி)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.கல்வி வலய கணிதபாட சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் திரு.நா.மகாநாதன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நாகநாதன் மனோன்மணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய ஆலோசகர் கழகம்,
யாழ்.கல்வி வலயம்.

## உழைக்கலாம் வாங்க

வேலையற்றோர், வேலைசெய்வோர், மேலதிக வருமானம் உழைக்க அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்வோர் உலகப்பிரசித்தி பெற்ற அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்யும் சர்வதேச கம்பனியில் இணைந்து 30% மேலதிக வருமானம் பெறுவதுடன், மேலதிக நன்மையும் பெறலாம். கடைகளை விட குறைவான விலையில் ஆண், பெண்களுக்கான உள்ளாடைகள், சமையலறைப் பாத்திரங்கள் வைப்பதற்கான றாக்கைகளும், அலுவலகம், கடைகள், Super Market களுக்குத் தேவையான பொருள்கள் வைப்பதற்கான உபகரணங்கள், றாக்கைகளும் புடைவைக் கடைகளுக்கு மொத்தமாகவும் உள்ளாடைகள் குறைவான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - 0776622194 (91507)

## யாழ்ப்பாணம் மாநகரசபை இலச்சினையில் பொறிப்பதற்கான மகுட வாசகம்

யாழ். மாநகரசபையின் இலச்சினையில் மகுட வாசகமாக பொறிப்பதற்குத் தகுந்த வாசகம் எதிர்வரும் 31.01.2010 ஆம் திகதி வரை பொது மக்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

யாழ். மாநகரசபையின் குறிக்கோள், செயற்பாடுகள், தடம்பதித்துள்ள துறைகள், நேரொத்த பணிகள், சேவைகள் முதலியவற்றைப் பிரதிபலிப்பதாக மகுட வாசகம் அமைதல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் வாசகங்களிலிருந்து பொருத்தமான மகுட வாசகம் அறிஞர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் மகுட வாசகத்தினை சமர்ப்பிப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம். (சி/563318)

## கண்ணீர்க் காணிக்கைகள்



பண்ணாகம் மெய்கண்டான்
மகாவித்தியாலயத்தில்
14 ஆண்டுகள் அதிபராக
அரும்பெரும் சேவையாற்றிய
பெருமதிப்புக்குரிய

### கார்த்திகேசு நடராசா

அவர்களுக்கு கண்ணீர்க் காணிக்கைகள்

மெய்கண்டான் மாதாவை மேன்மையுறச் செய்தவரே
பொய்யான வாழ்விது வென்று மேலோகம் சென்றீரோ
மாணவர் கல்வியில் கற்றுத்திழைத்திடவே
வேணவாக் கொண்டு நல் நூலகம் அமைத்தீர்
உயர்தரக் கல்வியை உவப்புடன் நாம் பெற்றிடவே
உயர்தர வகுப்புகளை உன்னதமாய் தொடக்கி வைத்தீர்
மாடிக் கட்டடத்தில் மாணவர் தாம் கற்கவென
நாடி நிதி சேர்த்து நற்பணியைச் செய்தீரே
கல்வி கற்பதுடன் களிப்புடன் நாம் விளையாட
நலன்விரும்பி துணை நாடி நற்காணி தேடிவிட்டீர்
அணிநடை தன்னை அழகுற ஆற்றிடவே
தணியாத வேட்கையுடன் பாண்ட் கருவி தந்து சென்றீர்
நெஞ்சில் நஞ்சின்றி தந்தைபோல் கண்டித்து
தரணி போற்றும் நல்லோரை உருவாக்கி வைத்தீரே
உம்மைப் போல் பணியாற்ற யாரைய்யா இனியெமக்கு
செயல்வீரா! சொல்வலனே! உந்தன் பெருமைகளைச்
சொல்வதற்கோ வார்த்தையில்லை
கதறியழுகிறோம் கடவுளுக்கோ கருணையில்லை
யாரை யார் ஆற்றுவது அறியாது தவிக்கின்றோம்.

ஐயாவின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்
ய.ா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய
பழைய மாணவர்கள்.
பண்ணாகம்,
சுழிபுரம். (சி/563320)

## குருநகர் மீனவர்கள் நேற்று தொழிலில் ஈடுபட்டனர்

குருநகர்,டிசெ.17.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலையில் சீரற்ற காலைநிலை நிலவிய போதிலும் குருநகர் மீனவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து குடாக்கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் அனுமதி வழங்கியதாக குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்தன.

நேற்று காலை 7 மணி தொடக்கம் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குருநகர் மீனவர்கள் கணிசமானோர் கடலில் இறங்கித் தொழில் செய்தனர். யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய கடற்கொந்தளிப்பு, கடும் காற்று, மழை காரணமாக மீனவர்களை மீன்பிடிப்பதற்குக் கடலுக்குச் செல்லவேண்டாமென எச்சரிக்கை வழங்கப்பட்டதையடுத்து கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீனவர்கள் கடலில் இறங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-50-51)

## தென்மராட்சியில் பல பகுதிகளில் வெள்ளம்

சாவகச்சேரி, டிசெ. 17

தொடர்ந்து பெய்துவரும் பெருமழையால் தென்மராட்சிப் பகுதியில் உள்ள தாழ் நிலப்பகுதிகள் உட்பட பல பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

அந்தப் பகுதிகளில் உள்ள குடிசைகளில் மழை வெள்ளம் புகுந்து கொண்டதால் அப்பதிகளில் உள்ள மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் பல இடங்களில் வீதிகளை மூடி வெள்ளம் பாய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

வயல் வெளிகளில் உள்ள குளங்கள் யாவும் நிரம்பி அதன் வாய்க்கால்கள் வழியாக வெள்ளம் வழிந்தோடுகிறது. வயல் வெளிகளில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. தோட்டங்களில் நீர் தேங்கியுள்ளதால் தோட்டப் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. (131)

## சுனாமி காவு கொண்ட ஞாபகார்த்த வழிபாடு

பருத்தித்துறை, டிசெ. 17

சுனாமி அனர்த்தத்தினால் காவு கொள்ளப்பட்ட உறவுகளுக்கான ஞாபகார்த்த வழிபாட்டை இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை - கட்டைவேலி சேகரம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்த ஞாபகார்த்த வழிபாடு சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட தினமான எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பருத்தித்துறை தும்பளையிலுள்ள 'நேசகம்' வளாகத்தில் பருத்தித்தறை - கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு. என்.அருள்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-190)

## மலேசியாவில் உயர்கல்வி

A/L,O/L உடன் மலேசியாவில் உயர் கல்வி வாய்ப்பினை மேலதிக கட்டணமின்றி உங்கள் விருப்பப்படி செய்து தரப்படும்.

7,புகையிரத வீதி, கந்தர்மடம்.

## கண்ணீர் அஞ்சலி



புனித ஆசிரிய
சேவையை யாழ்.இந்
துக்கல்லூரியில் மட்டும்
36 வருடங்கள் பூர்த்தி
செய்த ஆசான்

### பேனாட் போசர்

அவர்களின் மறைவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்துக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !சாந்தி ! சாந்தி.

ஆசிரியர் கழகம்,
யாழ்.இந்துக் கல்லூரி. (இ/563316)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.கல்வி வலய கணிதபாட சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் திரு.நா.மகாநாதன் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி நாகநாதன் மனோன்மணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்,
(91513) ஆசிரிய ஆலோசகர், கணித ஆசிரியர்கள், யாழ்.கல்விவலயம்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி ரவிபாலன் நிசானி

(மாணவி, றம்பைக்குளம் மகளிர் வித்தியாலம்)



வவுனியா, குட்செட் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நிசானி ரவிபாலன் நேற்று (16.12.2009) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் வவுனியா ரவிபாலன் - திரிபுர சுந்தரி தம்பதியினரின் ஏக புத்திரியும் துவாரகனின் பாசமிகு சகோதரியும் தியாகராசா(தலைவர், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்), நல்லம்மா, இராசாலிங்கம் மகேஸ்வரி (பண்டாரிக்குளம், வவுனியா) ஆகியோரின் பாசமிகுபேர்த்தியும், சுதாகரன் (யாழ்.போதனா வைத்திய சாலை), சுரமஞ்சரி (சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலம்), தர்மபாலன்,சிவபாலன் ஆகியோரின் பெறாமகளும் இளங்குமரன் பூங்குழலி (கனடா), அருளானந்தம் சாந்தினி, சிவபாலன் அனுசலா, சஞ்சேஸ்வரன் சயிலதா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2009) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

347/5, கோயில் வீதி, தகவல்: ஆ.தியாகராசா (பேரன்)
நல்லூர். T.P. 021 321 8279 ர.சுதாகரன் (தாதிய உத்தியோகத்தர்)

### திருமதி சோமசுந்தரக்குருக்கள் கோமளாம்பிகை



கோப்பாய் வடக்கு, கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரக் குருக்கள் கோமளாம்பிகை நேற்று (16.12.2009) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியக் குருக்கள் - இரத்தினசௌந்தரம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சண்முகக்குருக்கள்மற்றும் இராமலட்சுமிஅம்மா தம்பதியினரின் புதல்வியும்,சோமசுந்தரக்குருக்களின் அன்பு மனைவியும், சுசீந்திரராஜசர்மா, மஞ்சுஸ்ரீ, சுரேந்திரக்குருக்கள், சுஜீவகுமாரசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசல்யா, கௌரிபாலக்குருக்கள், நாகலட்சுமி, ஸ்ரீவித்தியா, ஆயோரின் அன்பு மாமியாரும், சுருதிசாகரன், சுருதிலோஜிதன், சுருதிஸ்வரூபன்,திருமதி லாவண்யா பிரசாந்தசர்மா, சரண்யா, சுப்ரபாதசர்மா, கௌசல்யா, ஸ்ரீபாரத்வாஜசர்மா, சோமவித்வேஸ்வர சர்மா, அபர்ணா, அஸ்விதா, அப்ஜா, சிவோதயன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில்கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகிலுள்ள செல்வவிநாயகர் ஆலயத்துக்கு வடக்கேயுள்ள மூத்த மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதேச செயலகம் அருகில், தகவல்: (சி/563319)
கோப்பாய் வடக்கு. சு.சோமசுந்தரக்குருக்கள் (கணவர்).

### திருமதி சின்னத்துரை அருளம்மா



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை அருளம்மா காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துக்குமார் - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம், குணரட்ணம், சண்முகநாதன் மற்றும் தங்கலட்சுமி, தேவராஜா, பவளம்மா (தேவி - கனடா), மலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாம்பாள் (கமலம்), புஸ்பறாணி (றாணி), தில்லைநாயகி (திலகா - பிரான்ஸ்), ஜெயரட்ணம் (ஜெயா - லண்டன்), டிபாலதாஸ் (பாலா - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமநாதன், மகாதேவா, காலஞ்சென்ற ரவீந்திரன், நீலா (றஞ்சி - லண்டன்), கலாவதி (கலா - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசையா, இராசம்மா மற்றும் பரஞ்சோதி, மகேஸ்வரி, மகேந்திராதேவி, காலஞ்சென்ற நவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய எண் - 716
பழைய எண் - 416 தகவல்:
நாவலர் வீதி, அரியாலை, திருமதி மகாதேவா புஸ்பராணி
(மாம்பழம் சந்தி) யாழ்ப்பாணம். (91511) (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசமைப்பு மீறலும் ஜனாதிபதியும்

இலங்கைத் தீவின் உயர் சட்டமான அரசமைப்பை, அந்த அரசமைப்பைப் போற்றிப் பாதுகாத்துப் பேணுவேன் என்று உறுதி கூறி, சத்தியப்பிரமாணம் செய்து பதவி யேற்ற ஜனாதிபதி, அதனை அப்பட்டமாக மீறினாலும் கூட, அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க முடியாத வக்கற்ற நிலையிலேயே அந்த அரசமைப்பு விதிகளும் ஏற்பாடுகளும் அமைந்திருக்கின்றன என்பதுதான் உண்மை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற பதவிக்கு இலங்கையின் அரசமைப்பு வழங்கியிருக்கும் கட்டுமட்டில்லாத அதிகாரம் அதனைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது. சில மாதங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்ற இலங்கையின் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இந்த விடயத் தை கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீரவின் இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு அப்பால் ....' என்ற தலைப்பில் பிரதான உரை நிகழ்த்துகையிலேயே முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, தற்போதைய ஜனாதிபதியின் அரசமைப்பு மீறல் போக்கைப் பட்டியலிட்டார். ஆனால், அப்படிப் பட்டியலிடுவதில் கூட, இன ரீதியான ஓரவஞ்சனை - பாகுபாடு - பிரதிபலித்தமையைக் காணமுடிந்ததுதான் கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டின் பல்வேறு அமைப்புகளும் அரசியல், நிர்வாகத் தலையீடின்றி சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் செயற்பட வழிசெய்யும் விதத்தில், அவற்றின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு சுயாதீனக் குழுக்களை அமைக்க வழிசெய்யும் வகையில் 2001 இல் அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தம் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கத்துடன் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் திருத்தத்தின் பெறுபேறாக - அரசமைப்பின் ஏழாவது அலகின் பிரகாரம் - இவ்விடயத்துக்காக அரசமைப்புக் கவுன்ஸில் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். அதற்கான உறுப்பினர்களின் பெயர்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளினாலும் பிரேரிக்கப்பட்ட பின்னரும் அந்த அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபித்துச் செயற்படுத்தி, அந்த விடயங்களை அதனிடம் ஒப்படைக்கத் தவறியதோடு, அதன்மூலம் அந்த அதிகாரங்கள் அனைத்தையும் ஜனாதிபதியே தன்வசம் தொடர்ந்து வைத்திருந்து பிரயோகிப்பதன் வாயிலாக - தமது இந்த ஆட்சிக்காலம் முழுவதும் - அரசமைப்பை மீறிச் செயற்பட்டு வருகின்றார் இந்த ஜனாதிபதி எனக் குற்றம் சுமத்துகிறார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

சரத் என்.சில்வா பிரதம நீதியரசராக இருந்த சமயத்தில், இவ்விடயத்தை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைப் பரிசீலனைக்கு எடுத்த அவரது தலைமையிலான உயர் நீதிமன்ற ஆயம், வழமைக்கு மாறாக, இந்த வழக்கில் ஜனாதிபதிக்கு எதிராக அழைப்பாணை விடுக்கும் அளவுக்கு (ஜனாதிபதியின் செயலாளருக்கு அந்த அழைப்பாணையை அனுப்பும் நிலைமைக்கு) சென்றது. ஆனால் ஜனாதிபதியை, அந்த உயர் நீதிமன்ற ஆயத்தால் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபிக்காமல், அதன்மூலம் அரசமைப்பு ஏற்பாடுகளை மீறி வரும் ஜனாதி பதியை உரிய வழிக்குக் கொண்டுவரவோ, திருத்தி சட்ட வழிப்படுத்தவோ, அரசமைப்பை மீறித் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றமையைத் தண்டிக்கவோ, கண்டிக்கவோ உயர் நீதிமன்றால் முடியவில்லை. அதற்குப் பதிலாகத் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர்,இப்போது எதிர்க்கட்சிகள் சார்பிலான ஒரு நிகழ்ச்சியில் வந்து அப்போக்குக்காக விசனம் தெரிவிக்க மட்டுமே முன்னாள் பிரதம நீதியரசரால் முடிந்திருக்கின்றது.

*''பொதுச் சேவை ஆணைக்குழுவை நிறுவாமல் அரசமைப்பின் 9 ஆம் அலகை ஜனாதிபதி மீறியுள்ளார். தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில், அரச பொதுச் சேவைகள் மீது அமைச்சரவைக்கு உள்ள அதிகாரங்களை அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் பறித்துத் தாம் எடுத்துக் கொண்டதன் மூலம் பொதுச் சேவைகளின் சுயாதீன இயக்கத்தைக் கட்டுப்படுத்தி ஜனாதிபதி தனது அதிகாரத்தைத் தம்மிஷ்டத்துக்கு விரிவுபடுத்தியிருக்கின்றார். தேர்தல்கள் தொடர்பான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவத் தவறியதன் மூலம் அரசமைப்பின் 14 ஆவது அலகை மீறியுள்ளதோடு, சுயாதீனத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் அவதானத்தின் கீழ் தேர்தல் நடைபெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வேண்டும் என்றே தடுத்துத் தவறிழைத்துள்ளார். பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் சில நீதியரசர்கள், பொலிஸ் மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், நாடாளுமன்றின் செயலாளர் நாயகம் போன்ற உயர் பதவிகளுக்கு அரசமைப்பின் 41பி, 41ஸி ஆகிய பிரிவுகளுக்கு மாறாக அவர் நியமனம் வழங்கியுள்ளார்.''* - என்று தற்போதைய ஜனாதிபதியின் அத்துமீறல்களை அவர் பட்டியலிடுகின்றார்.

நல்லது. அரசமைப்பை மீறும் இத்தகைய செயற்பாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு அனுபவம் மிக்க முன்னாள் பிரதம நீதியரசர் தகுந்தவர்தான்.

ஆனால், 2001 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 17 ஆவது திருத்த ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்தத் தவறியதன் மூலம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ கடந்த 4 ஆண்டுகளாக மேற்கொள்ளும் அரசமைப்பு மீறல்களைப் பட்டியலிடுகின்ற முன்னாள் பிரதம நீதியரசரும், எதிரணியினரும், இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னர் அரசமைப்பின் திருத்தமாக நிறைவேற்றப்பட்டு, கடந்த ஐந்து ஜனாதிபதிகளால் நிறைவேற்றப்படாமல் - நடைமுறைப்படுத்தப்படாமல் - வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டு வரும் அரசமைப்பு அத்துமீறலான பதின்மூன்றாவது திருத்தத்தைச் செயற்படுத்தத் தவறிய - விடயத்தை வெளிப்படையாகக் குறிப்பிட்டு, இலங்கை ஆட்சிப் பீடத்தை - இதுவரை ஆட்சியில் இருந்த ஐந்து ஜனாதிபதிகளையும் - குற்றம் சுமத்தப் பின்னடிப்பது ஏன்?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தத் தவறியதன் மூலம் நேரடியாகப் பாதிக்கப்பட்டு, பாகுபாடு காட்டப்பட்டு, ஓரவஞ்சனைக்கு உட்பட்ட தரப்பு, அந்த அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப் படுத்தப்படுவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கத்தைப் பெற்றுத் தேறப்போகும் சிறுபான்மையினரான தமிழர்கள் என்பதாலா?

# யாழ். ஆஸ்பத்திரிக்கு நோயாளர்களை பார்வையிட வருவோர் ஒதுங்க இடமில்லை

## வெயில், மழையில் நிற்கும் பரிதாப நிலை



யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வரும் பொதுமக்கள் காத்து நிற்பதற்கு இடவசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் இதனால் அவர்கள் வெயிலிலும், மழையிலும் நிற்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமை காரணமாக நோயாளர்களைப் பார்வையிட வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்கள் வெயில் மற்றும் மழை ஆகியவற்றால் நோயாளர்களாக மாறும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நோயாளர்களைப் பார்வையிட வருவோர், குறித்த நேரம் வரையும் வைத்தியசாலை முன்றிலில் காத்திருக்க வேண்டியுள்ளது. தினமும் இவ்வாறு அதிகமானோர் மழையிலும் வெயிலிலும் நீண்டநேரம் காத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

நோயாளர்களைப் பார்வையிட வருவோரின் நலனைக் கருத்தில் கொண்டு முன்னர் இப்பகுதியில் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்தக் கொட்டகை அமைந்திருந்த இடம் தெரியாமல் அகற்றப்பட்டுள்ளது.

இதனால் வைத்தியசாலைக்கு நோயாளரைப் பார்வையிடவரும் மக்கள் பாதுகாப்பாக நிற்பதற்கு கொட்டகை இல்லை. இதன் காரணமாக அவர்களின் உடல்நலம் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அதிக அக்கறை காட்டி பொதுமக்கள் தங்கி நிற்பதற்கு ஏற்ற வதிகளைச் செய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(50-14-16)

# ஐயப்பன் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.17

அகில இலங்கை யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானம் வருடாந்த மகரஜோதி மண்டல மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. தொடர்ந்து சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. அடியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஐய்ப்பன் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-16)

# யாழ்ப்பாணத்தில் இதுவரை 75 'மினி கோப் சிற்றிகள்' திறப்பு

## கூட்டுறவு உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்.மாவட்டங்களில் இதுவரை 75 'மினி கோப் சிற்றிகள்' திறந்து வைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில் மஹிந்த சிந்தனையின் கீழ் கிராமப்புற மக்களின் வசதி கருதி இந்த மினி கோப்சிற்றிகள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.இவற்றைத் திறப்பதற்கு சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மொத்தமாக அமைக்கத் தீர்மானிக்கப்பட்ட 80 மினி கோப்சிற்றிகளில் தற்போது 75 மினி கோப்சிற்றிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.எஞ்சியுள்ள ஐந்து மினி கோப் சிற்றிகளையும் டிசெம்பர் மாத இறுதிக்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (04-224)

# யாழ்.நகரில் போக்குவரத்தை இலகுபடுத்த 6 இடங்களில் வாகனத்தரிப்பிடங்கள்

## மாநகரசபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.நகரின் மத்தியில் வாகனங்களின்போக்குவரத்தினை இலகுபடுத்தவும் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை இயன்றளவு குறைக்கும் நோக்குடனும் நகரின் ஆறு வீதிகளில் வாகனத்தரிப்பிடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகம், போக்குவரத்து பொலிஸ்பிரிவு, வடபிராந்திய போக்குவரத்துச் சபை போன்ற அரச நிறுவனங்கள் மற்றும் வணிகர் கழகம், மினிபஸ் சங்கம்,ஓட்டோ சங்கம் ஆகியவற்றின் முழுமையான ஒத்துழைப்புடன் ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி, மின்சார நிலைய வீதி, சீ.பொன்னம்பலம் வீதி, ஸ்ரான்லி வீதி, ஸ்ரான்லி வீதியையும் மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் வீதி ஆகிய ஆறு இடங்களில் மேற்படி வாகனத்தரிப்பிடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை முதல் குறித்தொதுக்கப்பட்ட வாகனத்தரிப்பிடங்களில் வாகனங்கள்தரிப்பதை உறுதிப்படுத்துவதெனவும் மாநகர சபை தீர்மானித்துள்ளது.

வாகனங்களுக்கு அறவிடப்படவுள்ள கட்டணங்களின் விவரம் வரு மாறு:-

மோட்டார் சைக்கிள்- 7 ரூபா, ஓட்டோ - 10 ரூபா, மினிபஸ் - 20 ரூபா, லொறி - 30 ரூபா, சுமை கூடிய வாகனம் - 50 ரூபா. (50 - 16)

# திருநெல்வேலிச் சந்தைக்குள் மழைவெள்ளம்; வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.17

திருநெல்வேலிச் சந்தைக்குள் மழை வெள்ளம் உட்புகுந்துள்ளதால் சந்தை வியாபாரிகளும், நுகர்வோரும் பெரும் சிரமங்களுக்காளாகி வருவதைக் காணமுடிகின்றது.

நேற்றுக் காலையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் சந்தைக்குள்அதிகளவில் புகுந்ததால் அப்பகுதி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் சந்தையில் வியாபாரிகளும் பொதுமக்களும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் முக்கிய மரக்கறி விற்பனை மையமாக விளங்கும் இந்தச் சந்தைகளுக்கான கட்டடங்கள் நவீன வசதிகளுடன் தற்போதுதான் அமைக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் இக்கட்டடப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

தீவுப்பகுதி உட்பட குடா நாட்டின் சகல பிரதேசங்களிலும் இருந்து தற்போது திருநெல்வேலிச் சந்தைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய வரும் நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியாலும் தற்போது மழை வெள்ளம் உட்புகுந்துள்ளதாலும் திரு நெல்வேலிச் சந்தையில் வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (4-2 4)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி | 03 18.12.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ.09.06வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | மு.இ.09.08வரை |
| சுபநேரம்: | 06.23-07.53 வரை |
| ராகுகாலம்: | 10.53-12.23 வரை |

# பேராசிரியர் மகேஸ்வரன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,டிசெ.17

அமரர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியற்றுறையினைச் சார்ந்த பேராசிரியர் விரஞ்சா கருணாரத்ன 'இலங்கையின் லைக்கன்களும் அவற்றின் மருத்துவம் மற்றும் சூழலியல் முக்கியத்துவமும்' ('Srilankan Lichens: Their Medicinal and Ecological Potential') என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் இந் நினைவுப் பேருரையில் கலந்து கொள்ளுமாறு இரசாயனவியல்துறைத் தலைவர் டாக்டர் இ.ப[illegible]ன் கேட்டுள்ளார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை



விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி, இணுவில் கிழக்கைச் சேர்ந்த் இராசா கந்தசாமி (மனநோயாளி) என்பவரை கடந்த 07.11.2009 திங்கட்கிழமையில் இருந்து காணவில்லை. வயது 63, நீல நிறச் சேட்டும் கோடன் சரமும் அணிந்திருந்தார்.

(கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0214591878 (91509) தகவல்: மனைவி (பேபி)

# மெய்கண்டான் மாதாவின் கண்ணீர் அஞ்சலி



## அமரர் கார்த்திகேசு நடராசா

(முன்னாள் முதல்வர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

அன்னை மெய்கண்டான் அறிவொளி விளங்கிடவே
ஆர்வத்துடன் பதினான்கு ஆண்டுகள் முதல்வராக விளங்கினீர்
தன்னை உருக்கிடும் தளர்விலா முயற்சியால்
தாயவளின் குழந்தைகளை தரத்தினில் உயர்த்திவிட்டீர்
என்னை! எம் மாதா வலிகாமம் வலயத்தில்
ஏற்றமுடன் நிமிர்ந்திட அர்ப்பணித்தீர்
நின்னை நினைக்கிறோம் நெஞ்சமதில் நிறைவோடு
நீள் நிலத்தில் உம் புகழ் நிலையாக நிலைத்திருக்கும்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இவரின் தெய்வமாம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் பாடசாலைச்சமூகம்.

(ஓ/563315)

# திறப்புக் கோர்வை தவறிவிட்டது

Scooter மோட்டார் சைக்கிளின் திறப்புக் கோர்வை நேற்று (16.12.2009) புதன்கிழமை மானிப்பாய் வீதியூடாக இளவாலை செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பி.வ தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். T.P 021 321 3785

# வளவாளர்களுக்கான 3 நாள் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 17

தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் தமிழ் மொழிமூலமான வளவாளர்களுக்கான மூன்று நாள் விசேட பயிற்சி யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

வரவேற்புரையை தேசிய உற்பத்தித் திறன் செயலக உற்பத்தித்துறை அதிகாரி செல்வி சியாமா பெர்னாண்டோ வழங்கினார்.

நிறுவனங்கள், பாடசாலைகள், கைத்தொழில் நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்களை எவ்வாறு வினைத்திறன் - வினைத்திறன் ஊடாக உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம் என்ற தொனிப்பொருளில் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் 3 நாள் பயிற்சி நெறிக்கு தெரிவான பயிற்சியாளர்களுக்கு விசேட பயிற்சியும் - அதற்கான விரிவுரைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை-

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்யாத ஏனைய திணைக்களத் தலைவர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(302)

# கூட்டுறவின் கண்ணீர்க் காணிக்கை



சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபை உப தலைவர்

## அமரர் கார்த்திகேசு நடராசா

(ஓய்வுபெற்ற அதிபர்)

எமது சங்கத்தின் உபதலைவர் அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு கொடிய காலன் தாக்கத்தில் நெடியதொரு உருவம் அழிந்ததை நாடிய மக்கள், நண்பர்கள் கதி கலங்கியதை பார்த்து வாடி வதங்கும் நாம் உம்பிரிவால் கதி கலங்குகின்றோம் ஐயா! ஆற்றாமையால் அரற்றுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு, கூட்டுறவின் கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

# மரண அறிவித்தல்

## கந்தசாமி இரங்கநாதன்

(இரசாயனவியல் ஆசிரியர்)



சிவன்கோயில் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி இரங்கநாதன் 08.12.2009 அதிகாலை 4 மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளும், தகனக்கிரியையும் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு கைதடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி. (91515) தகவல்: தி.ஆத்மசகாயன்.

# வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் கிராமத் தெரிவு - 2009 முல்லைத்தீவு மாவட்டம் கட்டம் - V - II

உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யுத்தத்தினால் வீடுகள் அழிவடைந்த, மக்கள் மீளக் குடியமர்ந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் பின்வரும் கிராமங்கள், வீடுகள் மீள்நிர்மாணம் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

| இல | பிரதேச செயலர் பிரிவு | கிராம சேவையாளர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 01 | | துணுக்காய் | துணுக்காய் |
| 02 | | கல்விளான் | கல்விளான் |
| 03 | | உயிலங் குளம் | உயிலங் குளம் |
| 04 | | யோகபுரம் மேற்கு | யோகபுரம் மேற்கு |
| 05 | | மல்லாவி | மல்லாவி |
| 06 | | யோகபுரம் மத்தி | யோகபுரம் மத்தி |
| 07 | | திருநகர் | திருநகர் |
| 08 | | புதுவெட்டுவான் | புதுவெட்டுவான் |
| 09 | | அமைதிபுரம் | அமைதிபுரம் |
| 10 | | அம்பலபெருமாள்குளம் | அம்பலபெருமாள்குளம் |
| 11 | துணுக்காய் | ஆலங்குளம் | ஆலங்குளம் |
| 12 | | தேரங்கண்டல் | தேரங்கண்டல் |
| 13 | | யோகபுரம் கிழக்கு | யோகபுரம் கிழக்கு |
| 14 | | புகழேந்திநகர் | புகழேந்திநகர் |
| 15 | | பாரதிநகர் | பாரதிநகர் |
| 16 | | அனிச்சையன்குளம் | அனிச்சையன்குளம் |
| 17 | | தென்னியன்குளம் | தென்னியன்குளம் |
| 18 | | பழையமுருகண்டி | பழையமுருகண்டி |
| 19 | | ஐயங்கன்குளம் | ஐயங்கன்குளம் |
| 20 | | கோட்டைகட்டியகுளம் | கோட்டைகட்டியகுளம் |
| 21 | | வன்னிவிளான்குளம் | வன்னிவிளான்குளம் |
| 22 | | அம்பாள்புரம் | அம்பாள்புரம் |
| 23 | | கொல்லவிளான் குளம் | கொல்லவிளான் குளம் |
| 24 | | ஒட்டறுத்தகுளம் | ஒட்டறுத்தகுளம் |
| 25 | | சிவபுரம் | சிவபுரம் |
| 26 | | பாளிநகர் | பாளிநகர் |
| 27 | | கரும்புளியான் | கரும்புளியான் |
| 28 | மாந்தை கிழக்கு | பாண்டியன் குளம் | பாண்டியன் குளம் |
| 29 | | செல்வபுரம் | செல்வபுரம் |
| 30 | | மூன்று முறிப்பு | மூன்று முறிப்பு |
| 31 | | நட்டான்கண்டல் | நட்டான்கண்டல் |
| 32 | | விநாயகபுரம் | விநாயகபுரம் |
| 33 | | பொன்நகர் | பொன்நகர் |
| 34 | | சிரட்டிக்குளம் | சிரட்டிக்குளம் |
| 35 | | பூவரசன்குளம் | பூவரசன்குளம் |
| 36 | | முறிகண்டி | முறிகண்டி |
| 37 | | இந்துபுரம் | இந்துபுரம் |
| 38 | ஒட்டிசுட்டான் | பனிக்கன்குளம் | பனிக்கன்குளம் |
| 39 | | மாங்குளம் | மாங்குளம் |

இக் கிராமத் தெரிவு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்புபவர்கள் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் தங்களது ஆட்சேபனைகளை எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டம். (ஓ/563317) அரசாங்க அதிபர்.

# நீங்கா நினைவுகளுடன் ஆறாம் ஆண்டு...



தோற்றம்: 17.12.1945
மறைவு: 17.12.2003

அமரர்
## பொன்னுத்துரை ஐயாத்துரை
(துரைசிங்கம்)

(சிறாப்பர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் )

பாலை வனத்தில் பூக்கள் மலர்ந்திடலாம்
எம் முகத்தில் இனி மலர்ச்சியுண்டோ?
சூரியன் திசைமாறி மறையல்லாம்...
தங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு மறையுமா?
என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்

இவரின் ஞாபகார்த்தமாக யாழ்.நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட 'அட்சயசுரபி' மண்டபத்தின் ஐந்தாம் ஆண்டுப் பூர்த்தி இன்று

திருமதி யோகம்மா துரைசிங்கம் (மனைவி)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
315, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (91504)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை விஷ்ணுவர்த்தன் (விஷ்ணு)



துணைவி, சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை விஷ்ணுவர்த்தன் 15.12.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரம்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தர்சாவின் பாசமிகு கணவரும் கார்த்திகனின் அன்பு அப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible], வட்டுக்கோட்டை. (91508) தகவல்: சுந்தரம் (மாமன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கொட்டித் தீர்த்தது பெருமழை; வீடுகள், வீதிகள், வயல்கள் எங்கும் ஒரே வெள்ளம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

கடந்த சில நாள்களாக இடைவிடாது பெய்து வருகின்ற அடைமழையால் குடா நாட்டின் இயல்பு வாழ்வு ஆட்டங்கண்டுள்ளது. பார்க்குமிடமெங்கும் ஒரே வெள்ளக் காடு. வீதிகள், ஒழுங்கைகள் பலவற்றை யும் மேவியபடி பாய்ந்தோடுகிறது மழை நீர். இதனால் மக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. குடிமனைகள், பொதுக்கட்டடங்கள் சிலவற்றிலும் மழைநீர் உட்புகுந்துள்ளது.

வயல்கள் விவசாய நிலங்கள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் தமது விவசாயப் பயிர்களின் அழிவையெண்ணிக் கதிகலங்கியபடியே நிற்கின்றனர் குடாநாட்டு விவசாயிகள்.

**வடமராட்சியில்...**

வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய் இரவு தொடக்கம் நேற்றுப் பகல்வரை கடும்மழை, இடையிடையே இடி மின்னலுடன் இடைவிடாது பெய்ததைத் தொடர்ந்து பொது மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டது.

இப்பெருமழையினால் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகளில் குறிப்பாக அல்வாய், மாலுசந்தி, மந்திகை, பருத்தித்துறை, வல்வை போன்ற இடங்களில் வெள்ளம் வீதிக்கு மேலாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இது தவிர கிராமங்களில் உள்ள வீதிகளிலும் பெரு வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. தோட்டங்கள், வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வீதிகளில் வெள்ளம் ஓடிக்கொண்டிருப்பதால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் உள்ளிட்ட பல வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுவதில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கியிருந்தன. இ.போ.ச.பஸ், தனியார் பஸ் சேவைகளும் மிகமிகக் குறைவாகவே சேவையில் ஈடுபட்டன. மக்களின் நடமாட்டமும் பெரிய அளவில் இருக்கவில்லை. வடமராட்சிக்கு வெளியேயும் உள்ளேயும் அரச, தனியார் தொழில்களைப் புரிவோரில் அதிகமானோர் கடமைகளுக்குச் செல்லவில்லை.

தோட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் அண்மையில் நடுகை செய்யப்பட்ட புகையிலை, வெங்காயம் மற்றும் மரக்கறிப்பயிர் வகைகள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. குடாநாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் பெய்ய ஆரம்பித்த மழை தொடர்ந்து பெய்து வந்ததோடு கடந்த செவ்வாய் இரவு தொடக்கம் நேற்று புதன்கிழமை அதிகளவாகப் பெய்து பெரு வெள்ளத்தையும், விவசாய இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கடைகளுக்குள் வெள்ளம்**

நேற்று முன்தினம் இரவு தொடக்கம் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளம் மந்திகையில் உள்ள பலசரக்குக் கடைகளுக்குள் புகுந்ததால் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மந்திகை சாவகச்சேரி வீதியில் உள்ள என்.நாகேந்திரன், வ.செல்வராசா ஆகியோரது கடைகளிலேயே இந்நாசம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடும் மழையினால் கடைகளுக்குப் பின்னால் உள்ள தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் எங்கும் செல்ல முடியாமல் கடைகளுக்குள் புகுந்து கொண்டது. கடைகளுக்குள் வெள்ளம் வந்ததையடுத்து அங்கிருந்த அரிசி, மா, சீனி மூடைகளும் மற்றும் உலர் உணவுப் பொருள்களும் வெள்ளத்தில் மூழ்கி நாசமடைந்துள்ளன. இதனால் கடை உரிமையாளர்களுக்குப் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த நான்கு நாள்களாக பெய்துவரும் தொடர் மழையினால் யாழ்.குடாநாட்டு வீதிகள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

கடந்த பல வருடங்களாக வீதிகளில் ஏற்பட்ட குண்டுகள், குழிகள் உரியமுறையில் சீர் செய்யப்படாமல் இருந்தமையால் தற்போது இவ்வீதிகள் மிகவும் கடுமையாக பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பாதைகளாக மாறியுள்ளன.

காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பளை வரையான வீதி என்பன மிகவும் மோசமாக பல இடங்களிலும் சேதம் அடைந்து காணப்படுகின்றன.

குறிப்பாக மருதனார்மடம், இணுவில் வைத்தியசாலை, கொக்குவில் சந்தி, தட்டாதெரு சந்தி, மல்லாகம் என பல இடங்களிலும் வீதிகள் சேதத்திற்கு உள்ளாகிக் காணப்படுகின்றன.

இதே வேளை வீதியிலும் கூட [illegible] மருங்கிலும் பல இடங்களிலும் வெள்ளம் ஓட முடியாது நீர் தேங்கிக்காணப்படுவதனால் பாதசாரிகள் வீதி ஓரங்களினால் செல்ல முடியாது நடுவீதியால் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

**பெருமழையால் படாதபாடுபடும் மீளக்குடியேறிய மக்கள்**

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் வவுனியாவில் இருந்து மீள்குடியேற்றத்திற்காக யாழ்.குடா நாட்டிற்கு திரும்பியவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

கடந்த இரண்டு வாரங்களில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மீளக் குடியேறிய மக்களுக்கு இந்திய அரசினால் தகரங்கள் வழங்கப்பட்ட போதிலும், மரம், தடிகள் இல்லாமையினால் கொட்டில்கள் போடமுடியாத நிலமையிலேயே பல குடும்பங்கள் காணப்படுகின்றன.

இதே வேளை வவுனியாவில் இருந்து மீளக்குடியேறிய குடும்பங்களில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக தமது சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாது நலன்புரி நிலையங்களில் உள்ள சிறிய கொட்டில்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது பெய்யும் கடும் மழைகாரணமாக இவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாக பலரும் கவலையோடு தெரிவித்தனர்.

(50-04-68-236-224)

# கடும்மழை காரணமாக வலி.கிழக்கில் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிப்பு

## சந்தைகளிலும் அதன் விலை எகிறியது

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்து வரும் கனத்த மழையினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தாழ்ந்த நிலங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்களே வெள்ளத்தினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால் போன்ற பிரதேசங்களில் இம்முறை கூடியளவில் பெரும்போக வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதியில் தாழ்ந்த நிலங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை - குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்று ஒரு கிலோ வெங்காயம் 150 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. வெங்காயத்தின் விலை மேலும் உயரலாம் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (50-224)

# மீள்குடியமர்ந்த, இடம்பெயர்ந்த மக்களுக்கான உலருணவு நிவாரண விநியோகம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்.டிசெ.17

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட, 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக உணவு திட்டத்தின் கீழ் இந்த மாதத்திற்கான உலர் உணவுப் பொருள்கள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளன.

சிவப்பு அரிசி, வெள்ளை அரிசி, பருப்பு, சீனி மற்றும் சமையல் எண்ணெய் போன்ற பொருள்களே இந்த நிவாரணத்தின்போது விநியோகிக்கப்படவுள்ளன.

அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு-


| பொருள் | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் | 6 அங் | 7 அங் | 8 அங் | 9 அங் |
| அரிசி (சிவப்பு) | 6.200 | 12.400 | 18.600 | 24.800 | 31.000 | 37.200 | 43.400 | 49.600 | 55.800 |
| அரிசி (வெள்ளை) | 6.200 | 12.400 | 18.600 | 24.800 | 31.000 | 37.200 | 43.400 | 49.600 | 55.800 |
| பருப்பு | 1.860 | 3.720 | 5.580 | 7.440 | 9.300 | 11.160 | 13.020 | 14.880 | 16.740 |
| சீனி | 0.620 | 1.240 | 1.860 | 2.480 | 3.100 | 3.720 | 4.340 | 4.960 | 5.580 |
| எண்ணெய் | 0.680 | 1.360 | 2.040 | 2.720 | 3.400 | 4.080 | 4.760 | 5.440 | 6.120 |

# ஆயுள்வேதக் கண்காட்சி ஜனவரி மாதம் கைதடியில்

யாழ்ப்பாணம்,டிசெ.17

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜனவரியில் யாழ்.மாவட்டத்தில் ஆயுள்வேத கண்காட்சி ஒன்று நடை பெறவுள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் வாரத்தில் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் நடைபெறும் எனவும் இதற்கான ஆயத்த ஏற்பாடுகளைச் செய்யுமாறு யாழ்.மாவட்டத்திலுள்ள ஆயுள்வேத மருத்துவப் பொறுப்பதிகாரிகளை வட மாகாண சுதேச வைத்திய திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (50-57)






யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாள்களாகத் தொடரும் அடை [illegible] மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் இடம்பெயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் [illegible] காக்கைதீவுக் குடியிருப்புப் பகுதியில் உள்ள குடிமனைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதைப் படங்களில் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10.05.1960
உதிர்வு: 28.12.2008

## சேனாதிராஜா தயாளன்

(இலங்கை மின்சாரசபை ஊழியர், சுன்னாகம்)

முதலாம் ஆண்டு நினைவு தினமான இன்றைய நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

குடும்பத்தினர்

தற்காலிக முகவரி: C 1/1 சென்றல் றோட், கொழும்பு12, தொ.பே: 0113070572
நிரந்தர முகவரி: நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு



வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு 13.12.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்பையா - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் குலமணி, காலஞ்சென்ற மகாதேவா மற்றும் பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் புவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகச்சந்திரன் (இளைப்பாறிய உத்தியோகத்தர் C.T.B), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சுரேந்திரசந்திரன் (சுவீற்லான்ஸ் - ஆனைக்கோட்டைச் சந்தி), கிருஸ்ணரஞ்சினி, புஸ்பரஞ்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற திருஞானரஞ்சினி மற்றும் திருஞானச்சந்திரன் (ஜேர்மனி), தில்லைரஞ்சினி (ஆசிரியர், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), தில்லையற்கரசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் சிவபாக்கியம், ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), மங்களேஸ்வரி, நந்தகுமார் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கனகசுந்தரம் (ஜேர்மனி), அனுலா (ஜேர்மனி), கணேசமூர்த்தி (விரிவுரையாளர் - தொழிநுட்பக் கல்லூரி, வவுனியா), ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் நந்தினி - ஞானலிங்கம் (பிரான்ஸ்), சிவச்சந்திரன் (ஆசிரியர் - வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்) - மதிவதனி, கவிச்சந்திரன் - சுதர்சினி, செல்வச்சந்திரன் (ஆசிரியர் - அனலைதீவு), தாரணி (ஆசிரியர் - கரம்பொன்), அனித்தா (ஜேர்மனி), துசானி, வானதி, காண்டீபன் (தொழிநுட்பக் கல்லூரி, வவுனியா), கபிலன், பிரதீபா, ஜேர்மனியில் வசிக்கும் ஜசி, தினேஸ், எட்வின், திவ்ஜன், திவ்ஜா, பிரணவன், கஜானியா, அபிவர்ணன், ஜேர்மனியில் வசிக்கும் சுஸ்மிதா, விகாஸ், கிருத்திகா, அஸ்வின் ஆகியோரின் பேர்த்திம் கௌதமன், லக்ஸன், ஜனனி, தாருஜன், பானுஜன், மைதிலி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 17.12.2009 வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்.வடமேற்கு,
ஆனைக்கோட்டை. (91501)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உபதலைவர்

## கார்த்திகேசு நடராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், இல்லச் சிறார்கள்.
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி/563298)

## வவுனியா முகாம்களிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவருக்கு உதவிகள் இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.17

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களில் சிலருக்கு அரசினால் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. இதனால் முகாம்களில் தங்கியிருந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் ஏனைய மாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியுள்ள மாணவர்கள் அவர்களது செலவுகளை ஈடு செய்ய மிகுந்த சிரமப்படுகின்றனர். மாணவர்களின் இத்தகைய நிலையால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள பெற்றோர்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-341)

## ஆங்கிலக் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்.இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் எஸ். மகேஸ்வரன் எழுதிய "த ஓஷன் ஒவ் பேர்ள்ஸ்" என்ற ஆங்கிலக் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். யாழ்.நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கௌரவ விருந்தினராகவும் யாழ்.மாவட்ட நீதிபதி பி.வசந்தசேனன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சாகித்யரத்தினம் டாக்டர் கே.குணராசா விமர்சன உரை வழங்குவார். (ப)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

வடமராட்சி,டிசெ.17

தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பஜனை இடம்பெறும். இப்பஜனையை முருகன் அடியவர்கள் நிகழ்த்துவார்கள். (50-236)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

எம் இதயம் நிறைந்த நாள்
11 ★ 01 ★ 1966



எம் இதயம் உறைந்த நாள்
17 ★ 11 ★ 2009

## திருமதி ஜெகநாதன் மோகனசுந்தரி (மோகனா)

*(17.12.2009)*

அன்பையும் பாசத்தையும் அள்ளி வழங்கி
அன்னைக்கே இலக்கணம் தந்த அம்மா!
உன் அன்புக்காய் ஏங்கி நிற்கின்றோம் - உன்
கணவர் பிள்ளைகள் நாமிங்கு
மரணம் எனும் புதரில் மறைந்து விட்ட நீங்கள்
எம்மைக் காண வராவிட்டாலும்...
எம் நினைவுகளில் நீர் என்றும் இருப்பீர் - அம்மா!

கடந்த 17.11.2009 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வம் அவர்கள் நோயுற்றிருந்த போது சிகிச்சையளித்த யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கும், பராமரித்த தாதியர்களுக்கும் மற்றும் மரணச் செய்தி கேட்டு வந்து பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிங்கம் லேன்,
உடுவில். (91488)

கணவர்,
பிள்ளைகள்.


CARGO SERVICE TO ALL COUNTRIES
உலகலாவிய பொதிகள் சேவை
எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்



ஆகாய மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ உணவுப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நீங்கள் நம்பமுடியாத குறைந்த கட்டணத்தில் நான்கு வேலை நாட்களில் உங்களது உறவினர்களின் முகவரிக்கு கையளிக்கப்படும்.

*** எமது விசேடமுகவர் சேவைகள் ***

லண்டன்(wembley),சுவிஸ்(zurich),அவுஸ்திரேலியா(sydney),பிரான்ஸ்(paris), கனடா (toronto) போன்ற நாடுகளுக்கு உங்களின் தேவைக்கேற்ப வீட்டுமுகவரிக்கோ அல்லது எமது முகவர் நிலயங்களிலோ பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படும்.

லண்டன்,சுவிஸ்,அவுஸ்திரேலியா,பிரான்ஸ்,ஆகிய நாடுகளுக்கு 03 கிலோவிற்கு குறையாத பொதிகளுக்கு 1 kg க்கு 400/= வீதமும், கனடாவிற்கு 03 கிலோவிற்கு குறையாத பொதிகளுக்கு 1 kg க்கு 500/= வீதமும் அறவிடப்படும்.

LONDON Home Delivery 1st kg Rs. 1500.00, Additional 1 kg Rs.750.00
10 கிலோவுக்கு கூடுதலான பொதிகளுக்கு Rs. 700.00 வீதமும் அறவிடப்படும்

பொதிகள் அனுப்பும் சகல வாடிக்கையாளர்களுக்கும் ஒரு மெய்கண்டான் கலண்டர் இலவசம்
( இச்சலுகை டிசம்பர் 31ம் திகதி வரை மட்டுமே)

GTV ENTERPRISES ( PVT) LTD,
VIJEYA ENTERPRISES MAHARAJA FOOD PRODUCTS
Imports Exporters Food Producers Forwarding & Clearing Agents
Cargo Services to all Countries by Air & Sea, Courier Services
Srilankan Airlines Cargo Agents

Head Office
No:18/3,Dr.E.A.Cooray Mawatha,Wellawatta.Colombo-6.
Tel : 0112 360 926,0112 559 849.
Fax ;0112 361 139
e-mail : info@maharajafoodproduct.com

Branchs
No:225 ,Kasthuriyar Road, Jaffna Tel: 021 222 4338
No:170,Central Road,Colombo-12. Tel: 0112 448 928
No:288,George R. De.Silva Mw,Kotahena,Colombo-13. Tel: 0113 150 859
No:G-2,146,Negombo Road,Wattala.(Pearl Park) Tel: 0716 903 543
No:37/4,Trinco Road Batticoloa Tel: 065 222 7982
No:41,Central Road Uvarmalai (Thenthamil veethy Juntion) Tel: 026 222 1510
No:22,Busstant Vavuniya ( Sajees Com) Tel: 024 222 2166
No:24D Kanthasamy Kovil Road Vavuniya



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

15.12.2009

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2189

வெற்றி எழுத்து: H
வெற்றி எண்கள்: 4 1 5 4 6 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 4 | 1 | 5 | 4 | 6 | 2 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 1 | 5 | 4 | 6 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 1 | 5 | 4 | 6 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 5 | 4 | 6 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 141 |
| 4 பரிசுகள் | | | | | 4 | 6 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1424 |
| 5 பரிசுகள் | | | | | | 6 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 14240 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 141186 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 1 | 5 | 4 | 6 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | | 4 | 1 | 5 | 4 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 136 |
| 9 பரிசுகள் | | 4 | 1 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1431 |
| 10 பரிசுகள் | | 4 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 14148 |
| 11 பரிசுகள் | H | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 56414 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,656,500.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
Rs. 10,435,947.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
254/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## இருதயநாதன் ராஜா

**வேலாயுதம் ம.வி**

**கலைப்பிரிவு - ஏ2பி**

எனது தந்தை ஒரு சாதாரண மீனவத்தொழிலாளியாக இருந்த போதிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் எனது கல்வியின் செலவைச் செய்ய வேண்டியிருந்தது. நான் ஆரம்பக் கல்வியைத் தம்பசிட்டி.மெ.மி.த.க பாடசாலையில் கற்றேன். பின்னர் தரம் 9 தொடக்கம் உயர்தரம் வரை வேலாயுதம் ம.வியில் கல்வி கற்றுவந்தேன். நான் உயர்தரத்தில் கலைத்துறையினைத் தெரிவு செய்து கலைத்துறையில் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைக் கற்றேன்.

இப்பெறுபேற்றுக்கும் காரணமாக அமைந்த எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை பத்திரிகையூடாகக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எனது பெறுபேற்றுக்கு மூலகாரணமாக அமைந்த தாய், தந்தையருக்கும் இறைவனுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சந்திப்பு: கர்ணன்**



## அருண்ஜா சிவராஜா

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு - 3ஏ**

நான் ஆரம்பக்கல்வியை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடை நிலைக் கல்வியையும், உயர் கல்வியையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் கற்றேன். அங்கு கற்கும்போது எனக்குக் கல்வியில் மிகுந்த ஈடுபாடு இருந்தது.

உயர்தரக் கல்விக்காக கலைத்துறையைத் தெரிவு செய்த நான் எனது சகோதரியின் விருப்பத்திற்கிணங்க தமிழ், அளவையியல், வணிகப்புள்ளி விபரவியல் போன்ற பாடங்களை எனது தெரிவுகளாக்கிக் கொண்டேன்.

பாடசாலையிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிக்கும் போது அவற்றைக் கிரகித்து மனனம் செய்து கொள்வேன். தினசரி மீட்டல் பயிற்சிகளில் ஈடுபட்டு சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்துவேன். ஒவ்வொரு அலகு முடிவின் போதும் அவற்றிற்கான கடந்தகால வினாக்களைச் செய்து சரிபார்த்துக் கொள்வதுடன் பரீட்சை நெருங்கிய காலங்களில் கடந்தகால வினாத்தாள்களை முழுமையாகச் செய்வேன். இத்தகைய முயற்சியும்,பயிற்சியும் இருந்தமையால் பரீட்சையை எந்த மனப்பயமும் இன்றி ஒருசவாலாக எதிர்கொள்ள என்னால் முடிந்தது.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 3ஏ என்ற சிறப்புச் சித்தியை பெறுவேன் என்று முழுமையாக நம்பினேன். அதேபோல் எனது பரீட்சைப் பெறுபேறுகளும் அமைந்தன. எனது இந்த நம்பிக்கைக்கு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நண்பர்கள் போன்றோர் ஊன்றுகோலாக அமைந்தனர்.

எமது கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களின் ஊக்குவிப்பு, வழிகாட்டல் என்பவற்றுடன் விடாமுயற்சி, பயிற்சி, தன்னம்பிக்கை என்பனவும், இன்றியமையாதவை என்பதை அனுவபவத்தினூடாகத் தெரிந்து கொண்டேன்.

எனது வெற்றிக்குக் காரணமாகிய ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி போதித்த ஆசிரியர்களுக்கும் நான் கல்விகற்ற பாடசாலை அதிபர்களுக்கும் குறிப்பாக உயர்கல்வி கற்கும் போது எனது சந்தேகங்களைத் தீர்த்த பாடத்துறை ஆசிரியர்களுக்கும் எனது பெற்றோருக்கும் எனது திறமைகளையெல்லாம் எனக்கே இனங்காட்டிய பாடசாலைக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து இறைவனின் அருளால் எனது இலக்கை அடைவேன்.



## நிஷாழினி ஞானவடிவேல்

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு - 2ஏபி**

நான் எனது ஆரம்பக் கல்வியை வரணி மகா வித்தியாலயத்திலும், சின்னதம்பி வித்தியாலயத்திலும் கற்றேன். தொடர்ந்து இடைநிலைக் கல்வியையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் கற்றேன்.

நான் எனது உயர்தரக்கல்வியில் எனது விருப்பதிற்கு ஏற்ப கலைத்துறையைத் தெரிவு செய்தேன். நான் கற்ற பாடசாலை அதிபரினதும் மற்றும் எனக்குக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களினதும் தூண்டலின் துலங்கலாகவே எனது பரீட்சைப் பெறுபேறுகள் அமைந்தது.

ஆசிரியர் கற்பிக்கும் போது உன்னிப்பாகக் கவனித்து வைத்திருப்பேன். ஆனால் வீட்டில் நீண்ட நேரம் படிப்பதில்லை. ஒவ்வொருநாளும் கற்பிப்பதை வீட்டிற்கு வந்து சிந்தித்துப் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்வேன். எனது இச்செயற்பாடு பரீட்சை மண்டபத்தில் பேருதவியாக இருந்தது. பரீட்சை நெருங்கிய காலங்களில் எனது நண்பிகளுடன் குழுவாகச் சேர்ந்து வினாவிடைபற்றி ஆலோசித்து எனது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டேன்.

இவ்வாறான எனது பெறுபேற்றிற்கு உறுதுணையாக அமைந்த பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும், அதிபருக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளைக் கூறிக் கொள்வதுடன் எனது எதிர்கால இலக்கை அடைவதற்கு அவர்களது ஆசியை வேண்டுகின்றேன். எனது முயற்சிக்கு அப்பால் இறையருளே எனது பெறுபேற்றிற்குத் துணையாக அமைந்தது.



## நிலோஜினி பாலகிருஷ்ணமூர்த்தி

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**கலைப்ப்பிரிவு - 2ஏபி**

ஆரம்பக்கல்வியை தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை வடஇந்து மகளிர் கல்லூரியிலும் கற்று வந்த நான் தரம் 9 இலிருந்து என்னுடைய கல்வியை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ஆரம்பித்தேன்.

உயர்தரக் கல்விக்காக கலைத்துறையைத் தெரிவு செய்த நான் தமிழ், அளவையியல், வணிகப்புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களை தெரிவு செய்து கல்வி கற்றேன்.

பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் பாடம் கற்பிக்கும் போது முழுக் கவனத்துடன் கற்றமையாலும் கிரகித்து வந்தமையாலும் கடந்தகால வினாக்களைத் தொடர்ந்து செய்தமையாலும் சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொண்டமையாலும் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது. இதனால் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என ஏற்கனவே எதிர்பார்த்திருந்தேன்.

எனது பரீட்சைப் பெறுபேற்றினை அறிந்தபோது மிகவும் மிகழ்ச்சியாக இருந்தது. இவ்வாறு சிறந்த பெறுபேற்றினை எடுப்பதற்கு எமது பாடாசாலை அதிபர், ஆசிரியர்கள், அனைவரும் ஊக்குவித்தார்கள். இப்பெறுபேற்றினை பெறுவதற்குக் காரணமாய் இருந்த ஆசிரியர்களுக்கும் ஏனையோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## அருந்தஷா முருகேசு

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு - 2ஏபி**

நான் ஆரம்பக் கல்வியை ஞானாசாரியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வி மற்றும் உயர்தரக் கல்வியை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் கற்றேன்.

உயர்கல்விக்காகக் கலைத்துறையைத் தெரிவுசெய்து, அதில் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களைத் தெரிவுகளாக்கிக் கொண்டேன்.

பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையத்திலும் கற்பித்தவற்றைப் படித்துவிட்டு, அவற்றுக்கான பயிற்சிகள் மற்றும் வினாவிடைகளை மீட்டுப்பார்ப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுவேன். பரீட்சைக்கு ஓரிரு மாதங்களுக்கு முன் இரவு 11-2 மணி வரையான நேரத்தையே கல்விக்காக ஒதுக்கினேன். ஏனெனில் அமைதியே எனக்குச் சிறந்த தருணமாக இருந்தது. இவ்வாறே என் கல்வியை வளர்த்தேன்.

பரீட்சை முதல் நாள் பரீட்சை நிலையத்திற்குள் நுழைந்ததும், என்றுமே இல்லாதவாறு என் மனதில் ஓர் அசௌகரிய நிலை ஏற்பட்டது. சில மணி நேரத்தில் சாதாரண பரீட்சைக்கு முகங்கொடுப்பது போன்ற மனநிலை தோன்றியது.

இத்தகைய பெறுபேறு எனக்குக் கிடைக்கும் என்பது உண்மையில் நான் எதிர்பார்த்தது. இதனால் பெறுபேறு வந்தபின் எந்தவித சங்கடமும் எனக்கு இருக்கவில்லை. ஆனாலும் எப்போது, எப்படிவரும் என்ற ஏக்கம் என்னைத் துரத்தியபடியே இருந்தது. அந்த ஏக்கமே பெறுபேறு வந்ததும் என்னைச் சாதாரண மனநிலைக்குக் கொண்டு வந்தது.

இத்தகைய பெறுபேற்றிற்கு எனது பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களின் ஊக்குவிப்பு, வழிகாட்டல், பயிற்சிகள் மற்றும் பரீட்சைகளே காரணம் என்று கூறிக்கொள்ளலாம். உயர்கல்வி ஆசிரியர்களோடு ஏனைய ஆசிரியர்களின் ஊக்குவிப்பு மேலும் சிறந்த வழிகாட்டியானது. அத்தோடு எமது தேவையறிந்து எமக்காக தனது ஒத்துழைப்புடன் உதவிபுரிந்த அதிபருக்கும் எமது மாணவர்கள் சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றைவிட எனது பெற்றோரின் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றுமே எனக்கு இருப்பதால் அது மேலும் உறுதுணையாக இருந்தது. அத்தோடு எனது உடன்பிறப்புக்கள், நண்பர்களின் உதவியையும் வாழ்த்தி, எல்லோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## நிஷாந்தினி தங்கவேலாயுதம்

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு - 3ஏ**

நான் எனது ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கற்றேன். அங்கு உயர்கல்வியைத் தொடரமுடியவில்லை என்பதனால் அவ்உயர்கல்வியைத் தேடி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தொடர்ந்தேன். அங்கே என் விருப்பதினால் தமிழ், அளவையியல், இந்துநாகரிகம் போன்ற பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன். பாடசாலை தவிர தனியார்கல்வி நிலையத்திற்கும் அதாவது சதாபொன்ஸ், கணித நிலையம் போன்ற நிலையங்களிலும் கற்றேன். இவ்வாறு கற்றுவருகையில் முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றிய நான் 2ஏபி என்ற பெறுபேற்றினைப் பெற்றேன். அவ்வாறு 2ஏபி ஐ எடுத்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை என விரக்தியடைந்த போதும் என்னை மனந்தளராது இரண்டாந்தடவை பரீட்சைக்குத் தோற்றக் காரணமான எனது பெற்றோர், சகோதரிகள், அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் இரவு வேளைகளில் அதிகம் விழித்துப்படிப்பது இல்லை. ஆனால் பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிப்பதை உடனுக்குடன் மனப்பாடம் செய்து கொள்ளுவது வழக்கம். இந்த தன்மையின் காரணத்தினால் என்னால் இப்பெறுபேற்றினை பெறமுடிந்தது. எனவே நான் எனக்கு அடுத்து வரும் மாணவர்களுக்கு வலியுறுத்த விரும்புவது என்னவென்றால் ஆசிரியர்கள் கற்பிப்பவற்றை உடனுக்குடன் கற்பதனால் வெற்றியினைப் பெறலாம். நான் இந்த பெறுபேற்றினை எடுப்பதற்குக் காரணமாக அமைந்த அதிபர்கள், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், உயர்கல்வியினைப் புகட்டிய ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். மேலும் எனது கல்விக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர், சகோதரிகள், சகோதரன் அனைவருக்கும் எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ். சோமசுந்தரம் பாலர் பாடசாலையின் வெள்ளி விழா மலர் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வைக் காணலாம். (50-167)




அண்மையில் நடைபெற்ற ஆசிரிய தின நிகழ்வின் போது யாழ். பாலர் கல்விக் கழகத்தைச் சார்ந்தவர்களும் ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசலை ஆசிரியை களும் இணைந்து எடுத்துக்கொண்ட படம்.



சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தின் முன்பள்ளி ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் ந. அரசரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் முன்பள்ளி ஆசிரியர்கள், பள்ளிப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி ந.கிருஷ்ண ராசா, செயலாளர் க. கனகசபாபதி ஆகியோர் நிற்பதைக் காணலாம்.




யாழ். பாலர் கல்விக்கழகத்தின் 14 ஞானக்குழந்தை இல்லங்கள் ஒன்றிணைந்த கலைவிழா அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பொ.மகேஸ்வரன், கழகத் தலைவர் எஸ். பி. காசிநாதன் மற்றும் கழக உறுப்பினர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# வாழ்த்துகின்றோம்

நல்லூரைச் சேர்ந்த செல்வி மேனகா கேசவன் இன்று (17.12.2009) வியாழக்கிழமை காலை சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் அசோக டி.சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வதை முன்னிட்டு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் நீங்கள் உங்கள் பேரன் காலஞ்சென்ற சட்டத்தரணி கனகரத்தினம் ஜே.பி.யு.எம் அவர்களைப்போலும் மற்றும் உங்கள் பிதாவாகிய திரு.க.கேசவன் ஜே.பி.யு.எம். அவர்களைப் போல் சட்டத்துறையிலும் சமூக சேவையிலும் ஈடுபட்டு நீண்ட காலம் சந்தோசமாக வாழ வாழ்த்துகின்றோம்



**வாழ்த்துபவர்கள்:**
லயன் வல்லிபுரம் பரமசிவம் ஜே.பி, யா.மா. மூ.பிரஜைகள் பேரவை செயலாளர் (பேரன்), லயன் சீமாட்டி சரஸ்வதி பரமசிவம்- நல்லூர், (பேர்த்தி), Dr. பரமசிவம் சிவகுமார் வைத்திய ஆலோசகர்-லண்டன், Dr.திருமதி சாந்தினி சிவகுமார் (வைத்திய ஆலோசகர் - லண்டன்) Dr. சிவகுமார் பார்த்திபன் M-Oலண்டன் கிழக்கு Hospital, செல்வி சிவகுமார் ஆர்த்தி - வைத்திய மாணவி லண்டன் Cambridge University, திரு பரமசிவம் சிவயோகன் Royal Mail Office Staff- லண்டன், திருமதி சிவயோகன் சிவநாகநாயகி -லண்டன், செல்வன் சிவயோகன் மதூசன் - லண்டன்.

## பெண் சாரணிய ஆணையாளர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ, 17

யாழ். மாவட்ட ஆணையாளர், பிரதேச மாவட்ட ஆணையாளர்களுக் கான கலந்துரையா டல் நாளை வெள் ளிக்கிழமை மாவட்ட ஆணையாளர் திரு மதி நீ.தர்மகுலசிங் கத்தின் இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. (50-14)

## அவைக்காற்று நடனநிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ 17

வடஇலங்கை சங்கீத சபையின் ஏற்பாட்டில்ஆசிரியர் தரப் பரீட்சைக்கான திருமதி பவித்திரா செந்தில்குமாரின் அவைக்காற்று நடனநிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசா லையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாட்டு வாங்கம் திரு மதி சாந்தினி சிவ நேசன், பாட்டு திரு மதி சுகன்யா அரவிந் தன், மிருதங்கம் சு. மகேந்திரன், வய லின் அ.ஜெயராமன் ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர். (50-204)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18.12.1955
மறைவு: 17.12.2005

அமரர்
## கதிர்காமு முருகேசு
(சிவபாதம் - நாகர்கோயில் வடக்கு)

ஊரைவிட்டு, நாட்டைவிட்டு,
உயிரைவிட்டுப் போய் நான்காண்டு
ஆனதப்பா நீ எங்கள்
உள்ளத்தைவிட்டு அகலவேயில்லை
என்றும் நிலைகொண்டுள்ளாய் உன்
நினைவாகவே உள்ளோம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (சி/563277)

அக்காமார்,
மனைவி, மருமகன்.

# 15ஆம்ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23 ★ 03 ★ 1936



விண்ணில்
02 ★ 01 ★ 1995

## க.இளையதம்பி (அதிபர்)

திதி : பிரதமை

அன்பின் திருவுருவே !
தனித்திருந்த வாழ்வும் துயராச்சு
விழித்திருந்தகண்ணும் பனித்தாச்சு
படுத்திருந்த பஞ்சணையும்பாழாச்சு
நினைத்திருந்த முகமும் கனவாச்சு
நீங்கள் இல்லா வீடும் காடாச்சு
கொல்ல வரும்பொழுதும்இரவாச்சு
கூடிவரும் சோகம் பெரிதாச்சு

ஓம் சாந்தி

'மிதிலை',கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (92935)

மகன், மனைவி,
உறவினர்.

# மரண அறிவித்தல்

## கார்த்தியேசு காசிப்பிள்ளை



நிற்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாக வும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தியேசு காசிப்பிள்ளை 14.12.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி யேசு - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும், நவநந்தினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் பாலசிங்கம், இன்பராணி, விஜயநிர்மலா (ஜேர்மனி), திருநாவுக்கரசு (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான நடேசு - மனோன்மணி தம்பதியரின் மருமகனும் கம்சியா, பிறின் தாஸ்ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்திர னின் (லண்டன்) பாசமிகு மாமனும் பிறேமரா சன்(சுவிஸ்), றதிக்கா (சுவிஸ்), திலகவதி (ஜேர்மனி), பிறேமலதா (நிற்சாமம்) ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2009) வியாழக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா.பாலசிங்கம்.
(சகோதரர்)

நிற்சாமம்,
சங்கானை. (சி/563296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.05.1986

✱ சமஷ்டி அரசமைப்பில் வடக்கு- கிழக்கு இணைந்த ஒரு மொழி மாநில அமைப்பே தமது எதிர்பார்ப்பென த.வி. கூட்டணிக் குழு, அமைச்சர் சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழுவிடம் எடுத்துரைப்பு.

✱ இரு இளைஞர்கள் அணிகளுக்கிடையிலான கோஷ்டிமோதல் வெளி மாவட்டங்களுக்கும் பரவியது.

02.05.1986

✱ இனப் பிரச்சினைத் தீர்வு குறித்த த.வி. கூட்டணியின் யோசனைகளையே இந்தியக் குழு வற்புறுத்து.

✱ இரு இளைஞர்கள் அணிகளுக்கிடையில் உருவாகியுள்ள மோதல்களை நிறுத்துமாறு தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜீ.ஆர். வேண்டுகோள்.

✱ வடக்கு - கிழக்கைத் தமிழர் தாயகமாக அரசு அங்கீகரிக்க வேண்மென இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிராந்தியத் தலைவர் கோரிக்கை.

03.05.1986

✱ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஜனாதிபதியின் கருத்து எழுத்து மூலம் இந்தியக் குழுவிடம் கையளிக்கப்படும்.

✱ இராணுவத் தீர்வொன்றுக்கு இலங்கை அரசு முனையக் கூடாது என்பதை வலியுறுத்தவே அமைச்சர் சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழு இங்கு வந்ததாக இந்தியத் தூதரகம் தெரிவிப்பு.

04.05.1986

✱ கட்டுநாயக்காவில் 'எயர்லங்கா' பயணிகள் விமானத்தில் குண்டு வெடித்ததில் 26 பயணிகள் பலி: 35 பேர் காயம்.

✱ இந்தியக் குழுவுக்கும் இலங்கை அரசுக் குழுவுக்கும் இடையேயான மூன்றாவது கட்டப் பேச்சுகள் இடம்பெற்றன.

✱ பெரும்பான்மையின மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதான தீர்வொன்றே இனப் பிரச்சினைக்கான தீர்வாக அமைய வேண்டியது அவசியமென எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவிப்பு.

05.05.1986

✱ இலங்கை அரசு சமஷ்டி அமைப்புக்கு இணங்கினால் மட்டுமே பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என்பதே இந்தியத் தூதுக் குழுவின் கருத்து என அக் குழுவுடன் நெருங்கிய தொடர்புடைய தரப்பினர் தெரிவிப்பு.

✱ கட்டுநாயக்க விமானத் தகர்ப்புக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக விமானத் தில் ஏற்றப்பட்ட இறைச்சிப் பொதிக்குள் வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிப்பு.

06.05.1986

✱ இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான இலங்கை அரசின் புதிய கருத்துக்கள் குறித்து இந்திய அதிகாரிகள் த.வி. கூட்டணியுடன் ஆராய்வர்.

✱ விடுதலைப் புலிகளின் எழுச்சி தென் இலங்கைக்குத் தலையிடியாக அமையும் எனச் சிங்களத் தினசரி 'திவயின' கருத்து வெளியீடு.

07.05.1986

✱ 'ரெலொ' இயக்கத்தின் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் கொலை. ஏனைய ரெலோ இயக்கத்தினரைச் சரணடையுமாறு அறிவிப்பு.

✱ வடக்கு - கிழக்கு இணையாத தீர்வொன்றைத் த.வி. கூட்டணி ஏற்காதென கிழக்கு மாகாண கூட்டணிப் பிரமுகர்கள் தெரிவிப்பு.

08.05.1986

✱ கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் பெரும் குண்டுவெடிப்பு. இடிபாடுகளில் சிக்குண்டு; பலர் மரணம்.

✱ இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இந்தியப் பிரதமரின் முக்கிய முடிவு வார இறுதியில் வெளியிடப்படுமென இந்திய அரச வட்டாரங்களில் தெரிவிப்பு.

09.05.1986

✱ இலங்கை அரசு இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியக் குழுவிடம் கையளித்த எழுத்துமூல கருத்துக்களில் பெரும் இடைவெளி இருப்பதாக இலங்கை அரசிடம் இந்திய அரசு விளக்கம் கோரியுள்ளது.

✱ குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட கொழும்பு மத்திய தந்திக் கட்டட இடிபாடுகளை ஜனாதிபதி ஜே.ஆரும் அமைச்சர் அத்துலத் முதலியும் பார்வையிட்டனர்.

✱ மத்திய தந்திக் கந்தோர் கட்டட குண்டு வெடிப்புக்கு ஈரோஸ் இயக்கம் உரிமை கோருகிறது.

10.05.1986

✱ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை சமர்ப்பித்த கருத்துக்கள் குறித்து விளக்கங்களை அறிந்து செல்ல இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் கொழும்புக்கு விரைவு.

✱ திருகோணமலையில் பிரபல சட்டத்தரணி பொ.இரங்கநாதன் சுட்டுக்கொலை.

✱ தமிழீழ விடுதலை அமைப்பு என்ற 'ரெலோ' அமைப்பு கலைக்கப்பட்டுள்ளதாகத் தமிழ் ஈழ இராணுவம் என்ற அமைப்பு அறிவிப்பு.

11.05.1986

✱ வட பகுதிக்கான ரயில் சேவையை வவுனியா வரை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்க ரயில்வேத் திணைக்களம் ஆராய்வு.

✱ தமிழர்களது உரிமைகள் கிடைக்கும் வரை போராடுவோம் என த.வி.கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரம் தெரிவிப்பு.

✱ மாகாணசபை முதல் அமைச்சருக்கு அதிகாரங்களை வழங்கவும், பறிக்கவும் கூடியதாக நாடாளுமன்றத்துக்கு வசதிகள் வழங்கப்படும் என்பது இலங்கை அரசு இந்தியக் குழு மூலம் இந்திய அரசுக்கு எழுத்து மூலம் கொடுத்தனுப்பிய யோசனைகளில் ஒரு முக்கிய அம்சமாகும்.

12.05.1986

✱ இலங்கை அரசு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முன்வைத்துள்ள புதிய யோசனைகள் நிராகரிக்கப்பட்டால் இராணுவத்தீர்வே அதற்கான மாற்று வழி என ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

✱ தீவிரவாதிகள் தமது தாக்குதல்களைத் தொடர்வதால் அரசு தனது படைகளைப் பலப்படுத்த வேண்டியுள்ளதாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி தெரிவிப்பு.

13.05.1986

✱ இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இலங்கை அரசின் புதிய யோசனை குறித்து பிரதமர் ராஜீவ்காந்தியுடன் பேச த.வி.கூட்டணி - போராளிகளின் பிரதிநிதிகள் கொண்ட கூட்டுக்குழுவொன்றை நிறுவ முயற்சி.

✱ அரசியல் தீர்வைத் துரிதப்படுத்துமாறு இந்திய அரசு வலியுறுத்து. இது குறித்து ஜே.ஆருடன் இந்தியத் தூதுவர் டிக்ஷிற் பேச்சு.

✱ பிரிட்டிஷ் அரசு இலங்கையுடன் நேரடியான இராணுவத் தொடர்புகளை வைத்துள்ளதாக லண்டன் பத்திரிகை தெரிப்பு.

14.05.1986

✱ இந்தியாவின் உதவியுடன் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான இணக்கமான யோசனைகள் உருவாகுமானால் அது குறித்து தமிழ்க் குழுக்களுடன் பேசுவதற்கும் அரசு தயாரென அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவிப்பு.

✱ இலங்கையுடன் முழு அளவிலான ராஜீகத் தொடர்புகளை இஸ்ரேல் ஏற்படுத்தவுள்ளதாகக் கொழும்பிலுள்ள இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவுத் தலைவர் தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் புதிய மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு இந்திய அரசு இலங்கை அரசைக் கோரியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

15.05.1986

✱ கொழும்பின் முக்கிய இடங்களில் - அலுவலகங்களில் மேலும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுமென எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரங்கள். பாதுகாப்புப் பிரிவு உயரதிகாரிகள் தெரிவிப்பு.

✱ தமிழர் தரப்பிடம் சமர்ப்பிக்கும் அளவுக்கு இலங்கை அரசு முன்வைத்துள்ள யோசனைகள் போதுமானவை அல்ல என இந்திய அரசு, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரிடம் தெரிவிப்பு.

# இந்தியப் பிரதமர் கொடுத்த அழுத்தத்தினால் பொன்சேகாவை அரசு பதவி நீக்கவில்லை

## பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய விளக்கம்

கொழும்பு, டிசெ. 17

வெளிநாடுகள் எவற்றினதும் அழுத்தம் காரணமாக இராணுவத் தளபதிப் பதவியிலிருந்து ஜெனரல் சரத் பொன்சேகாவை நீக்கவில்லை. அன்றைய காலத்தின் தேவை கருதியே இந்த மாற்றம் இடம்பெற்றது.

- இப்படி அரசு தெரிவிக்கிறது.

இந்தியப் பிரதமரின் வேண்டுகோளுக்கு ஏற்பவே சரத் பொன்சேகா இராணுவத் தளபதிப் பதவியிலிருந்துஅகற்றப்பட்டார் எனப் பாகிஸ்தானின் 'த நேஷன்' வெளியிட்டுள்ள செய்தி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அரச பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

இலங்கை அரசு ஒருபோதும் வெளிநாடுகளின் விருப்பங்களுக்கு அமைய செயற்பட்டதில்லை; செயற்படப்போவதுமில்லை. அழுத்தங்களுக்கு அடிபணிந்து முக்கிய தீர்மானங்களை அரசு எடுக்கப்போவதில்லை என்றும் ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

கடந்த மே 21 ஆம் திகதி இந்தியப் பிரதமர் இலங்கையின் அரச தலைமையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய புலனாய்வுத் தகவல்களை வழங்கினார் எனக் கொழும்பு வட்டாரங்களை அடிப்படையாகக் கொண்டு பாகிஸ்தானின் 'த நேஷன்' பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசிற்கு இராணுவத்தினால் ஆபத்துள்ளது எனப் புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாக வைத்து மன்மோகன் சிங் எச்சரித்தார். இலங்கை இராணுவம் மிகப் பெரியதாக வளர்ந்துவிட்டது. பாகிஸ்தான், பங்களாதேஷில் இடம்பெற்றமை போன்று ஆபத்தான நிலை இலங்கையில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என அவர் கூறினார் என 'த நேஷன்' தெரிவித்துள்ளது. (சி)

# அரச ரகசியத்தை வெளியிட்ட குற்றச்சாட்டு; சரத்துக்கு 14 வருடச்சிறை விதிக்க முடியும்

## சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரின் கருத்து இது

கொழும்பு, டிசெ. 17

அரச இரகசிய சட்டமூலத்தின் கீழ் அரச இரகசியத்தை வெளியிட்ட குற்றச்சாட்டுக்காக பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு 14 வருட காலச் சிறைத் தண்டனை விதிக்க முடியும் - என்று சிரேஷ்ட சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது வெள்ளைக் கொடிகளை ஏந்தி வந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களைச் சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய உத்தரவிட்டார் என ஜெனரல் சரத்பொன்சேகா வெளியிட்ட கருத்து தொடர்பாக கூறியபோதே அவர் இதனைக் கூறினார்.

ஊடகத்துறை அமைச்சில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இதுசம்பந்தமாக பொலிஸ் மா அதிபர் விசாரணை நடத்த முடியும். சட்டமா அதிபரால் சரத் பொன்சேகாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் முடியும் - என்றார்.

இதேவேளை, இங்கு கருத்து தெரிவித்துள்ள பிரபல சட்டத்தரணி கோமின் தயாசிறி, சரத் பொன்சேகாவின் இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டனவா என்பதை அறிய யுத்த நீதிமன்றத்திற்கு சர்வதேச ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் சரத் பொன்சேகா சாட்சியாளராக ஆஜராக வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், யுத்த நீதிமன்றத்தில் ஆஜராகிய அரச தலைவர் என்ற வகையில் இலங்கைக்குப் பெரும் அவப்பெயர் ஏற்படக்கூடும் எனவும் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-சி)

# அன்றுபோல் படையினருக்காக இன்றும் முன்னிற்பேன் - சொல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 17

யார் காட்டிக்கொடுத்தாலும் நான் அன்று போல் இன்றும் படையினருக்காகவே முன்னிற்பேன் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பால் உற்பத்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார் .

பால் உற்பத்தியாளர்களின் மாநாடு நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

நாட்டின் பல பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பால் உற்பத்தியாளர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

நாட்டின் பால் தேவையை உள்நாட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து பால்மாவை இறக்குமதி செய்வதற்குச் செலவிடும் நிதியை நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிட முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஊழிய நிதியத்தின் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்ட மூவாயிரம் பேரில் ஆயிரம் பேருக்கான சான்றிதழ்கள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

இதேவேளை, இலங்கை சமசமாஜ கட்சியின் முன்னோடியான ஜி.எச். வில்லியம் டி சில்வாவின் பிறந்ததினத்தை முன்னிட்டு வடிவமைக்கப்பட்ட நினைவு முத்திரை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தலைமையில் வெளியிடப்பட்டுள்ளது. (சி)

# ம.ம.மு. ஆதரவு யாருக்கு?

கொழும்பு, டிசெ. 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்வதற்காக மலையக மக்கள் முன்னணி பல்வேறு தரப்புகளுடன் பேச்சுகளை நடத்தி வருகிறது.

இது தொடர்பில் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் கடந்த 14 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்துத் தீர்மானம் எடுப்பதற்கான முதல் கட்டமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து எமது கோரிக்கைகளை முன்வைத்தோம். எமது கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். இதேபோல எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆகியோரையும் சந்தித்துப் பேசுவோம். அதன் பின்னரே எமது முடிவு அறிவிக்கப்படும். எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் எமது முடிவை நாம் அறிவிக்க முடியும் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான தங்கள் பாரம்பரிய மண்ணிலிருந்து போரின் பெயரால் பிடுங்கி எடுக்கப்பட்ட கிழக்குத் தமிழர்கள் 'மீள்குடியேற்றம்' என்ற பெயரில் தரிசு நிலங்களில் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

மேற்கொள்ளப்பட்ட பல்குழல் எறிகணைத் தாக்குதல்களினால், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு, வெருகல் ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இரவோடு இரவாக உடுத்த உடையுடன்

கிணறுகள் அமைத்தாலும் நீர் பெறுவது கஷ்டம்.

நிலத்துக்கு அடியில் நீர் ஊற்றும்மில்லை. ஏக்கர் கணக்கில் இருந்த வளமான நிலத்திலிருந்து விரட்டி

# வளம் மலிந்த சம்பூர், மூதூரிலிருந்து ....



சம்பூர் மற்றும் மூதூர் கிழக்கு பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் வளமான அந்த நிலங்களிலிருந்து துரத்தப்பட்ட தமிழ் மக்கள் 'நவரத்தினபுரம்' எனப் பெயரிடப்பட்டுள்ள தரிசு நிலமொன்றில் குடியேற்றப்படுகின்றனர்.

வட பகுதியில் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு என்ன நடைபெறப் போகின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இது அமைகின்றது.

கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளிடம் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட போதும் - அங்கிருந்து போர் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் 6,000 பேர் இன்னும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

வீடுவாசல்கள், உடைமைகள், தோட்டங்கள், வயல்கள், கால்நடைகளையும், உறவுகளையும் இழந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்ந்தார்கள்.

இவர்கள் அனுபவித்த துன்ப, துயரங்களை வார்த்தைகளினால் எடுத்துக் கூறமுடியாது. இரண்டு வருடங்களுக்குப் பின் மீள்குடியேற்றப்பட்ட போதும் நன்கு திட்டமிடப்பட்ட மீள்குடியேற்றமும், புனர்வாழ்வும் இம்மக்களுக்கு வழங்கப்படவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களினால் அரைகுறையாகத் திருத்தப்பட்ட வீடுகளில்தான் இன்றும் மக்கள் வாழ்கின்றனர். பலருக்கு இவ்வசதிகள் கூட செய்து கொடுக்கப்படவில்லை. வைத்தியம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற வசதிகள் இன்றியும் வாழும் வாழ்க்கை தொடர்கின்றது. பாடசாலைகளும் திருத்தப்படவில்லை. தளபாடம், கற்பித்தல் உபகரணங்கள், ஆசிரியர்கள் வளங்கள் இன்றியும் பல பாடசாலைகள் நடைபெறுகின்றன.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நுண்கலை ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்களின்றியே பல பாடசாலைகள் பெயரளவில் இயங்குகின்றன. கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் திட்டமிட்டு

அடித்துவிட்டு வளமற்ற இடத்தில் குடும்பத்துக்கு 20 பேர்ச் காணியை ஒதுக்கியிருக்கும் தாராள மனப்பான்மையை எண்ணிப் பார்க்கின்றோம்.

மீன்பிடித் தொழில் செய்தவர்களுக்கும் இதே கதிதான். மூதூர் இறால்குழி, நாவலடி என்ற இடங்களுக்கு இடையில் உள்ள உப்பு நிலத்தில் அவர்களைக் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. சில குடும்பங்கள் வலுக்கட்டாயமாகக் குடியமர்த்தப்பட்டுமுள்ளனர்.

மகாவலிகங்கை பெருக்கெடுக்கும் பொழுது 3 - 4 அடி நீர் வழிந்து கடலில் சேரும் பள்ளமான பிரதேசம். இங்கும் ஒரு குடும்பத்திற்கு 10 பேர்ச் காணி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களின் விருப்பத்துக்கு மாறாகக் கட்டாயப்படுத்தி, மீள்குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை அப்பட்டமான மனிதஉரிமை மீறல் செயற்பாடாகும்.

மூதூர் கிழக்கில் மக்கள் வாழ்ந்த வீட்டுக் காணிகள், தோட்ட நிலங்கள், வயல் காணிகள், குளங்கள், மேய்ச்சல் நிலங்கள் எனப் பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் உயர்பாதுகாப்பு

# கிணற்று நீரும் கிடைக்காத வரண்ட பூமியில்

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - அண்மையில் நடத்திய ஆய்வின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த இந்த இடம்பெயர்ந்த மக்கள் 2 ஆண்டுகளாக இடைத் தங்கல் முகாம்களிலேயே நாள்களை ஓட்ட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

### தமிழர்கள் இழந்த சம்பூர், மூதூர்

2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிழக்குப் பிரதேசம் முழுவதும் விடுதலைப் புலிகள் வசம் இருந்து மீட்கப்பட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்திருந்தது.

அதன் பின்பு - அனல் மின் நிலையம் அமைப்பதற்காக சம்பூர் மற்றும் மூதூர் கிழக்குப் பகுதிகள் சிறிலங்கா அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பிரதேச மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

### தமிழரை மிரட்டியடித்த இராணுவ நடவடிக்கை

மூதூர் கிழக்கு சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, நவரத்தினபுரம், கடற்கரைச்சேனை, சம்புக்களி ஆகிய கிராமங்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்தவை. இக்கிராமங்களில் வாழ்ந்த சுமார் 2000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சார்ந்த சுமார் 7500 மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளினால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இவர்கள் இடம்பெயர்ந்தபோது வீடுவாசல்கள் முற்றாக அழிக்கப்பட்டு தோட்டநிலங்கள் சேதப்படுத்தப்பட்டன. இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்று கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேணை ஆகிய இடங்களில் உள்ள இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், பொது இடங்களிலும் வசதிகள், வாய்ப்புகள் இன்றி துன்பவாழ்க்கை வாழ்கின்றனர்.

இவர்களின் பிள்ளைகளுக்கு ஒழுங்கான கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. விவசாயம் செய்தவர்களைத் தோப்பூர்,



மக்களுக்கு நீர்வழங்கி வந்த குளங்களும் அதியுயர் பாதுகா[ப்பு] வ[லய]த்தில் சிக்குண்டுள்ளன..

வலயமாகவும், வர்த்தக வலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி கூறியவை

இங்கு வாழ்ந்த மக்கள் இராணுவ நடவடிக்கையால் விரட்டியடிக்கப்படும் பொழுது அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இந்த இராணுவ நடவடிக்கை இங்கு வாழ்ந்த மக்களின் நன்மை கருதியே நடைபெறுகின்றது என்று பகிரங்கமாக ஊடகங்களின் மூலம் கூறியிருந்தார்.

# வலுக்கட்டாயமாக மீள் குடியேற்றப்படும் தமிழ் மக்கள் .....

இதனால், அந்தப் பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு தமிழ் மக்களின் பாரம்பரியக் காணிகள் சிறிலங்கா அரசால் சுவீகரிக்கப்பட்டு விட்டதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினசிங்கம் குற்றம் சாட்டுகின்றார்.

17.11.2009 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் குறை நிரப்புப் பிரேரணை விவாதத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் இப்பிரகடனம் தொடர்பில் ஆற்றிய உரையின் சில பகுதிகள் இங்கு கவனிக்கத்தக்கவை. அவை வருமாறு:-

2006 ஏப்ரல் 25 ஆம் திகதியிருந்து

இந்த வரண்ட நிலத்தில் குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அங்கு தமது முதன்மைத் தொழிலான விவசாயத்தை மேற் கொள்வதற்குச் சிக்கல் படுகின்றனர்.



பள்ளிக்குடியிருப்பு கிராமத்துக்கு அண்மையில் உள்ள சின்னக்குளம் என்ற இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்கு அம்மக்களின் விருப்பமின்றி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### பொருத்தமற்ற நிலத்தில் மீள்குடியேற்ற எத்தனம்

இப்பிரதேசம் குடியிருப்புக்கோ, பயிர்ச்செய்கைக்கோ அறவே பொருத்தமற்ற பிரதேசமாகும். அரிதற்கள் நிறைந்த களிநிலம். அத்துடன் 30 - 40 அடி ஆழத்துக்கு மேல்

இக் கூற்றை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மெய்பிக்க வேண்டும் என்பது தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்பாகும். இவ்வளவு கூடுதலான மக்கள் வாழ்ந்த நிலப்பரப்புகளை மக்கள் மீள்குடியேறமுடியாது உயர்பாதுகாப்பு வலயம், சுதந்திர வர்த்தகவலயம் என்று பிரகடனப்படுத்தியிருப்பது மூதூர் கிழக்கில்தான். அங்கு வாழ்ந்தவர்கள் ஒட்டு மொத்தமாக தமிழர்கள் என்ற காரணத்தினாலா இத் தடை உத்தரவு? - இப்படிக் கேட்டார் அவர்.

நன்றி:
'புதினப் பலகை' இணையத்தளம்

★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சரவணா புடவையகம்

No:1

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை

நல்லூர்

**01.12.2009-31.12.2009 வரை மட்டும்**

இன்றே விரையுங்கள்

- ★ இந்தியன் சீக்குன்ஸ் சாறி Full Worked 1900/-
- ★ இந்தியன் திரட்வேக் சாறி Full Worked 1800/-
- ★ இந்தியன் சில்க்சாறி (Official Saree) 650/-
- ★ இந்தியன் கொட்டன் சாறி (Official Saree) 850/-
- ★ இந்தியன் கொட்டன் சாறி 1500/- (Rich cotton vijayalaksmy 6.20m)
- ★ இந்தியன் சில்க் பஞ்சாபித் துணி 1000/- (No.1 Special quality Gurukupa)
- ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித் துணி 1300-2400/- வரை (Rich cotton Special quality)
- ★ பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணி 700/- (லைனிங் தேவை இல்லை)

மற்றும் இந்தியன் சாறிகள் பஞ்சாபித் துணிகள் ஏராளம்! ஏராளம்!! மிக மிக மகத்தான விலைக் கழிவில் உள்ளது.

"வாருங்கள் வந்து பாருங்கள்"

எங்கும் கிடையா விலையில்

New Selection

**Saravana Tex**

526, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி) சிவன்கோயில் அருகில் யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஏழு நாள்களும் காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை கடை திறந்திருக்கும்.

# மனிதனுக்குத் தன்னம்பிக்கை மிக அவசியம்

மனிதன் தன்னிடம் நம்பிக்கை வைப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன? அவன் தனியாக இருப்பதாகவும், இறைவனை விட்டுப் பிரிந்திருப்பதாகவும் நினைத்துக் கொள்வதுமே காரணமாகும். ஆனால் உண்மையில் அவனது இதயத்தின் அடித்தளமாக இருப்பதே தெய்வீகந்தான். பிரபஞ்சம் முழுவதும் நிரம்பியிருப்பதும் அதே தெய்வீகம்தான். நீங்கள் இறைவனிடம் உறுதியான நம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் எப்போதும் பயப்படமாட்டீர்கள். நீங்கள் வழிபடும் தெய்வமே எல்லாப் பொருளிலும், எல்லா உயிர்களிலும், உங்களிடமும் இருப்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். அந்த நம்பிக்கை உங்கள் இதயத்திலுள்ள அனைத்து விதமான பயங்களையும் ஓட்டிவிடும். ஆனால் அந்த நம்பிக்கை உங்களிடம் இல்லையேல் பயம் உங்களை ஆட்டிப்படைத்துவிடும். ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு அடி வைக்கும் போதும் நீங்கள் பயப்படுவீர்கள். சோதனை நேரும்போது பயந்து விடுவீர்கள். விமானத்தில் பயணம் செய்யும்போது பயப்படுவீர்கள். சாலையில் எதிர்த்திசையில் ஓர் வாகனம் வந்தாலும் பயப்படுவீர்கள். தூங்க ஆரம்பித்ததிலிருந்து தூங்கி எழும்வரை பயப்படுவீர்கள். உங்கள் காலம் முழுவதும் பயத்திலேயே கழிந்து கொண்டிருக்கும். ஆனால் இது சரியல்ல. பயமற்றவர்களாக நீங்கள் மாறியாக வேண்டும்.

நீக்கமற நிறைந்துள்ள ஒன்றின்மீது நம்பிக்கை வைப்பதே நீங்கள் பயமின்மையை வளர்த்துக் கொள்வதற்கான வழியாகும். நம்பிக்கை இழக்கும் போது பயம் அதிகரிக்கும். உங்களுடைய உண்மையான சொந்த இயல்பை நீங்கள் மறந்துவிட்டீர்கள். ஐந்தடி அல்லது ஆறடி வரை உள்ள உடம்பே நீங்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் உண்மையில் எல்லையற்ற வடிவமும் அளவிலா ஆற்றலும் உடையவர்கள். சிறிது முயன்றால் மோக மயக்கங்களைக் களைந்து ஆத்மாவைக் கண்டு நிர்வாண நிலையில் ஐக்கியமாகிவிடலாம்.



## சாயி சிந்தனை

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்
வரதர் வெளியீடு நிறுவன
சாதனையாளர்
**சாகித்ய இரத்தினம்**
**தி.ச.வரதராசன்**
**(வரதர்)**
திதி: 17.12.2009

மலர்வு:
01.07.1924



உதிர்வு:
21.12.2006

காலம் போயின கருத்துகளும் மாறின
நான்கள் போயின நாள்காட்டிகளும் மாறின
ஓரமாய் போயிருந்து ஒப்பாரிதான் வைத்தாலும்
மாறாதாமே உங்கள் இழப்பு எம் அருமை அப்பா

குடும்பத்தினர்

84/ 3 மானிப்பாய் சாலை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(சி-563222)

## காணி விற்பனைக்கு

முதலாம் குறுக்குத் தெருவில், ஆஸ்பத்திரி வீதிக்கு மிக அண்மையில் இல.17 இல் கடை அல்லது களஞ்சியம் அமைக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள 16.5 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0779439813,
0779382868
(91457)

சிவமயம்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 | | 01 |
| 05 |  | 01 |
| 1943 | | 2006 |

**அமரர் சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், வருமானவரித் திணைக்களம்)

திதி: பூர்வபக்க பிரதமை (17.12.2009)

குடும்பத்தின் குல விளக்காய் என்றும் மறவா
அன்புடன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய அன்புத்தெய்வமே அப்பா!
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் குரல் காதில் கேட்குதே!
நீங்காத நினைவுடன் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகின்றேன்.

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு.

மனைவி -
**திலகேஸ்வரி.**

(563272)





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல்**
குளுக்கோஸ்

100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


# தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணத்திலும் பின்னர் இரணைமடு கிளிநொச்சியிலும் வசித்து வந்த மயில்வாகனம் வசந்தராஜா என்பவரை அல்லது அவரது குடும்ப அங்கத்தவர்கள் எவரையாவது கனடாவில் வசிக்கும் கந்தையா ஸ்ரீதரன் என்பவர் தொடர்புகொள்ள விரும்புகிறார்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல.:
0014252562100 (92955)


## SATS-TECH ENGINEERS

- மாதகட்டணம் ரூ. 400/= இருந்து
- பக்கேஜ்களுக்கான கட்டணங்கள் செலுத்திக் கொள்ளலாம்
- தேவைக்கேற்ப தெரிவு

Rs.8000/= ONWORDS

X'MAS NEW YEAR OFFER

SPORTS NEWS MOVIES MUSIC

No: 300 KKS Road Jaffna.
Phone:- 021 2228812 / 222 4559
0217210228


# இலங்கை வங்கி

BOC

## அச்சுவேலிக் கிளையின் மீட்கப்படாத தங்க அடகு நகைகளின் ஏலவிற்பனை

ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டபடி டிசெம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெற்ற அடகு நகை ஏலவிற்பனையில் அச்சுவேலிக் கிளைக்குரிய ஏல விற்பனை பூர்த்தி செய்யப்படாமையால் இவ் ஏலவிற்பனை எதிர்வரும் 19.12.2009 அன்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையில் 04.03.2009இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும், 04.09.2008இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் இவ் ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

ஏலவிற்பனைத் திகதி: **19.12.2009 (சனிக்கிழமை)**
காலை 9 மணி

ஏல விற்பனை நடைபெறும் இடம் :
சுன்னாகம் மேற்தரக்கிளை
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

ஏலவிற்பனையை இரத்துச்செய்யும்/ ஒத்தி வைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

ந.சிவரட்ணம்
உதவிப்பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி (வட பிராந்தியம்). (563265)

# விஷம் கலந்த ஊசிஏற்றி தாதி ஒருவர் உயிர்துறப்பு

அம்பாறை, டிசெ.17

அம்பாறை வைத்தியசாலையில் கடமையாற்றிவந்த தாதி ஒருவர் விஷம் கலந்த ஊசியை அவரது உடலில் குற்றி தற்கொலை செய்து கொண்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தனிப்பட்ட பிரச்சினை ஒன்றின் காரணமாகவே இவர் இவ்வாறு தற்கொலை செய்திருக்கின்றார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர்களில் ஒருவரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம்.கருணாரட்ண தெரிவித்தார்.

இறந்தவருக்கு 30 வயது வரை இருக்கும் என்றும் சடலம் பதுளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இத்திடீர் மரணம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் அங்கு இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நாகமுத்து வேலாயுதம்



மண்ணில்
**16.07.1948**

விண்ணில்
**09.01.2008**

அன்பின் தீபச் சுடரே!
எங்கள் அன்பின் குடும்பக் குலவிளக்கே
இல்லத்துக்கோர் ஆதாரமாய் இருந்த ஒளி விளக்கே
எட்டுத்திசை சென்றாலும் உன் பெயர் சொன்னால்
பூமணம் வீசுவது போல் எங்கும் உன் மணம் வீசுகிறது
அத்தனை புகழும் சேர்த்து தந்த அன்னையத் தீபமே!
எம்மை தவிக்க விட்டு சென்றது ஏனோ?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(92998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரிவின் துயர் வலிது

கொட்டும் மழை என்ன
கொடும் பனியென்ன
ஈர் ஐந்து மாதங்கள்
என்னைக் கருவில் தாங்கி
உடல் நொந்து பெற்றெடுத்து
பாலூட்டிச் சீராட்டி
தாலாட்டி வளர்த்த
என் அன்பு அன்னை
இன்றில்லை என் அருகில்
உலகைப் படைத்த இறைவன், தான்
எல்லா இடத்தும் இருக்கமுடியாதென்பதால்
தாயவள்தனைப் படைத்தான்
ஒவ்வொரு வீட்டிலும்
அத்தெய்வம் கொலுவிருக்கும்
அன்னையவள் இழப்பெனக்கு பேரிழப்பு
என் இதயத்துடிப்பின்
ஒவ்வொரு ஓசையும்
அம்மா என்று உச்சரிக்க
எப்போ நான் சந்திப்பேன்
மீண்டும் என் அன்னைதனை
உன் மடியில் தலைவைத்து
நான் துயின்ற
நாள்களை (நான்) எண்ணிக் களைக்கின்றேன்
'அம்மா' என்றழைத்து நான்
உன் மடியில் தலைசாய்க்க
ஏங்குகின்றேன் எப்போதும்.

போ.தாயகன், உரும்பிராய் கிழக்கு.

## அறிந்ததும் அறியாததும்

★ ஒளியானது ஒரு செக்கனில் 186,000 மைல்கள் செல்லும்.

★ முதலை மூக்கிலும் நத்தை கொம்பிலும் கண்களைக் கொண்டுள்ளன.

★ கோழி முட்டைக்குள் இருக்கும் கரு சுவாசிக்க கோழி முட்டையின் ஓட்டில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண்துளைத் துவாரம் இருக்கும்.

★ 1930ஆம் ஆண்டு தொடக்கம் அலங்கார மீன்வளர்ப்பு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

★ இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை உதயதாரகை ஆகும்.

★ 2011ஆம் ஆண்டில் இலங்கையின் குடிசன மதிப்பு எடுக்கப்படும்.

சு.பிரியங்கா
தரம் -11, கம்பர்மலை வித்தியாலயம்,
வல்வெட்டித்துறை.

## உதயனின் உதயம்




உதயனே....!
காலையில் தினமும் ஆதவன்
உதிப்பதுபோல்
எம்மவர் இல்லங்களில் நித்தமும்-
வருபவனே
உலகறியும் விடயங்களைத்
தன்னகம் கொண்டவனே
நிறைகுறை சுட்டிக் கூறுபவனே
எம்மவர் உள்ளம் கவர்ந்தவனே
நித்தம் கம்பீர உலா வருபவனே
மாசில்லாக் கலங்கரையே
சுட்டெரிக்கும் உதயனே-நீ
பல்லாண்டு காலம் வாழ்க-நின்
பணிகள் வளர்க எங்கும்
உன் புகழ் ஓங்குக.

கோ.தர்ஷிகா
64, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## சிந்தனைத் துளிகள்

★ குறிக்கோள் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகுபோல
★ வெற்றியால் ஆரவாரப்படாதே, தோல்வியால் துவண்டு போகாதே
★ கல்வியை நீ நேசி, காலம் உன்னை நேசிக்கும்
★ திறமைதான் ஏழையின் நிரந்தரச் சொத்து
★ வாழ்க்கைக்குப் பயிற்சி பெறுவதுதான் கல்வி
★ எதிர்ப்பு எங்கு இல்லையோ அங்கு வெற்றியில்லை
★ பெற்றோரை நேசி, ஆசிரியரை நேசி, கல்வியை நேசி,
இறைவன் உன்னை நேசிப்பான்
★ கடந்த காலத்தைப்பற்றி வருந்தி எதிர்காலத்தை இழக்காதே
★ தோல்விகள் பாரமல்ல, அவை உனக்குப் பாடங்கள்
★ உண்மையான அறிஞன் பிறரைத் தாழ்மையாக எண்ணமாட்டான்
★ படித்தவன் சிந்திக்கின்றான், சிந்திப்பவன் முன்னேறுகின்றான்
★ தெரிந்திரு, தெரியும் என்று இருக்காதே
★ உங்களுடைய இலக்கு எப்போதும்
உயர்வானதாகவே இருக்க வேண்டும்.

ஞா.மேரி கொன்சியா
தரம்-11,
யா/புனித.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

## நிறங்களும் குணங்களும்

**சிவப்பு** - வெற்றியின் நிறம். இதை அளவுக்கு மீறிப் பயன்படுத்தக்கூடாது.

**மண்ணிறம்** -நிலைத்து நிற்கும் உணர்வைத் தூண்டும்.

**நீலம்** - அமைதி தரும் நிறம். படுக்கை அறைக்குப் பயன்படுத்தலாம்.

**இளஞ்சிவப்பு** - பாசம், காதல் உணர்வுகளைத் தூண்டும். வரவேற்பு அறை, படுக்கைஅறை, நிறச் சீலைகளில் பயன்படுத்தலாம்.

**வெள்ளை** - எண்ணங்களைக் குவித்து வைக்கும். படிக்கும் அறை, பூஜை அறைக்குப் பயன்படுத்தலாம்.

**மஞ்சள்** - அறிவு, ஒற்றுமை, சாப்பாட்டு அறை, வரவேற்பு அறை, பூஜை அறைக்குப் பயன்படுத்தலாம்.

**பச்சை** - வளர்ச்சி, நம்பிக்கை, புதிய தொடக்கத்தின் அடையாளம்.

**கறுப்பு** - எதையும் தனக்குள் ஈர்த்துவிடும். இந்த நிறம் அதிகமாக இருந்தால் மனச்சோர்வும் ஏக்க உணர்வுகளும் பயமும் வரும்.

சி.தர்சிகா
198/10, திருவள்ளுவர் சாலை, அரசடி வீதி, கந்தர்மடம்.

## இளவல்கள் வட்டம்

YOUTH

### இளஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................
முகவரி :-......................................
:-......................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கேள்விக்கு என்ன பதில்? -53

**ஒலிம்பிக் விளையாட்டைக் குறிக்கும் சின்னத்தில் எத்தனை வளையங்கள் உண்டு? அவை எவற்றைப் பிரதிபலிக்கின்றன?**

### கேள்விக்கு என்ன பதில்?-51இன் சரியான விடை

சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவதனால் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு சூரிய ஒளியினால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவேயாகும்.

### கேள்விக்கு என்ன பதில்? 51 இல் பரிசு பெறுவோர்

01. **இராசேந்திரம் நிஜன்**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
02. **ஜெ.ஆரூரன்**
72/1, பிரம்படி லேன், கொக்குவில்.
03. **சி.தர்சிகா**
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

## வரலாற்றில் இந்த வாரம்

### டிசெம்பர் 11



இஸ்லாமிய மதத்தை இழிவாகத் தன்னுடைய படைப்புகளில் சித்திரிக்கிறார் என்று இஸ்லாமியர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்ட எழுத்தாளர் சல்மான் ருஷ்டி தன்னுடை தலைமறைவு வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்து 1991ஆம் ஆண்டு செம்பர் 11ஆம் திகதி வெளிப்பட்டார்.

### டிசெம்பர் 12

தான் கண்டுபிடித்த வானொலிப் பெட்டியை 1896ஆம் ஆண்டு டிசெம்பர் 12ஆம் திகதி லண்டனில் ரொயின் பீ மண்டபதில் மார்க்கோணி முதன்முறையாக காட்சிப் படுத்தினார்.




### டிசெம்பர் 13



ஆங்கில அகராதியை தொகுத்தவரான டாக்டர் சாமுவேல் ஜோன்சன் 1784ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி காலமானார்.

### டிசெம்பர் 14

அமெரிக்காவில் முதலாவது ஜனாதிபதியாக பதவியேற்ற ஜோர்ஜ் வோஷிங்டன் 1799ஆம் ஆண்டு டிசெம்பர் 14ஆம் திகதி காலமானார்.



### டிசெம்பர் 15



வட அயர்லாந்தில் அமைதியைத் தோற்றுவித்த 'டௌனிங் ஸ்ரீட்' பிரகடனத்தை பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரும், அயர்லாந்துக் குடியரசின் பிரதமர் அல்பேர்ட் றெனால்டும் இணைந்து வெளியிட்டனர்.

### டிசெம்பர் 16

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வரிவிதிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட உலகப்புகழ்பெற்ற 'பொஸ்டன் ரீ பார்ட்டி' என்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பொஸ்டன் துறைமுகத்தில் 1773ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி நடைபெற்றது.



### டிசெம்பர் 17



ஐக்கிய நாடுகள் சபையின் ஏழாவது பொதுச் செயலாளராக் கோபி அனான் 1996ஆம் ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி தேர்ந்தெடுக் கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சியால் உங்களின் பலன் மாறப்போவது எப்படி?

## இடபம்

தயவு தாட்சண்யமும் தாராள மனசும் கொண்ட நீங்கள், சில நேரங்களில் புரட்சிகரமாக முடிவெடுப்பீர்கள். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது போல, கோபப்பட்டால் தூக்கி எறிந்து பேசுவீர்கள். மனிதநேயம் உள்ள நீங்கள் மரம், செடி, கொடிகளையும் நேசிப்பீர்கள். குடும்பத்தினர் மீது தீராத பாசம் கொண்ட நீங்கள் மற்றவர்களையும் அரவணைத்துப் போவீர்கள். சமூக அவலங்களைத் தட்டிக்கேட்கும் தைரியசாலியான உங்களை குருபகவான் அடுத்துவரும் ஒரு வருடத்திற்கு என்ன செய்யப் போகிறார்?

இதுவரை உங்களுக்குப் பாக்கியமான வீடான 9ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு கேட்டபோதெல்லாம் பணத்தைத் தந்த குரு பகவான் 15.12.2009 முதல் 10ஆம் வீட்டில் அமர்ந்து பலன் தரப்போகிறார். ஈசனாரொருபத்திலே தலையோட்டிலேயிரந்துண்டதும் என்று பழைய பாடல் கூறுகின்றது. பத்தாம் வீட்டில் குரு வந்தால் பதவி, பட்டங்கள் இழந்து பரிதவிக்க வைக்கும் என்றெல்லாம் சில நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. அதிர்ஷ்டவசமாக குருபகவான் ஓராண்டு காலம் பத்தாம் வீட்டில் அமராமல் 04.05.2010 முதல்06.11.2010 வரை லாப வீட்டில் அமர்வதால் 10ஆம் வீட்டு பலன்கள் குறையும். திடீர் யோகம் உண்டாகும். செல்வாக்கு கூடும். அத்தோடு மட்டுமல்லாமல் உங்களின் பிரபல யோகாதிபதியான சனிபகவானின் நட்சத்திரத்தில் 22.05.2010 முதல் 27.09.2010 வரை செல்ல இருப்பதால் வேலை கிடைக்கும். தந்தை வழியில் இருந்து வந்த பிணக்குகள் நீங்கும். அயல்நாடு சென்று வருவீர்கள். தந்தைவழி சொத்துகளை அடைவதில் இருந்த பிரச்சினைகள் தீரும்.

குரு உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டை பார்ப்பதால் முகப்பொலிவு கூடும். பேச்சில் இருந்த தடுமாற்றம் நீங்கும். வராது என்று நினைத்திருந்த பணம் கூட கைக்கு வரும். குடும்பத்தில் கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். கௌரவப்பதவிகள் தேடி வரும். குரு ஏழாம் பார்வையால் 4ஆம் வீட்டைப்பார்ப்பதால் தாயுடன் இருந்த கருத்து மோதல்கள் நீங்கும். தாய்க்கு இருந்த நோய் குணமாகும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியைத் தொடர்வீர்கள். வங்கிக்கடன் கிடைக்கும். சிலர் வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டில் குடி புகுவீர்கள்.



பழுதாகியிருந்த வாகனத்தை மாற்றி புது வாகனம் வாங்குவீர்கள். அத்தை, அம்மான், மாமன் வகையிலிருந்த பகை உணர்வு நீங்கும். குரு 9ஆம் பார்வையால் 6ஆம் வீட்டை பார்ப்பதால் தேவையற்ற வீண் அலைச்சல்கள், திடீர் பயணங்கள் குறையும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனில் ஒரு பகுதியை தீர்க்க பிரபலங்களிடமிருந்து சில உதவிகள் கிடைக்கும். வழக்கை நடத்த நல்ல வழக்கறிஞரை அமர்த்துவீர்கள்.

15.12.2009 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 வரை பிள்ளைகளின் போக்கை கண்காணிப்பது நல்லது. கூடாதபழக்க வழக்கங்கள் வரக்கூடும். எனவே பிள்ளைகளுடன் அதிக நேரம் ஒதுக்கிப் பேசுங்கள். அவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளுங்கள். பிள்ளைகளின் உயர் கல்விக்காக அதிகம் செலவு செய்ய வேண்டி வரும்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்கள் 7ஆம் வீட்டு அதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் உங்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். ரத்த சோகை, மனைவிக்கு கர்ப்பப்பை கோளாறு, சிறு சிறு அறுவை சிகிச்சைகள் வந்து செல்லும். அநாவசிய செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து வருந்துவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். சொத்து வாங்குவது, விற்பதில் கவனம் தேவை. சகோதர வகையில் அலைச்சல் ஏற்படும்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். எதிர்பார்த்த அயல் நாட்டுப்பயணம் அமையும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் அஷ்டம லாபாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத் திரத்தில் செல்வதால் இக்காலகட்டத்தில் சிறுசிறு விபத்துகள், மூத்த சகோதரர் களுடன் மனத்தாங்கல், குடும்பத்தில் சந்தேகம், நண்பர்கள், உறவினர் பகை, எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலை, அரசாங்க அதிகாரிகளால் தொந்தரவுகள் வந்து நீங்கும். வெளி வட்டாரத்தில் உங்களைபற்றி சிலர் தவறாகப் பேசுவார்கள்.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு லாப வீட்டில் அமர்வதால் அரசால் அனுகூலம், திடீர் பணவரவு, மகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் முடியும்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உங்களின் பிரபல யோகாதிபதியான சனி பகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பிரபலங்கள் உதவு வார்கள். எதிர்ப்புகள் நீங்கும். மகனுக்கு வேலை கிடைக்கும். அயல்நாடு சென்று உயர்கல்வி தொடர விசா கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் வந்து சேரும். உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்கில் வெற்றியடைவீர்கள்.

வியாபாரத்தில் கடன் வாங்கி முதலீடுகள் செய்ய வேண்டாம். ஓரளவு லாபம் வரும். வேலையாள்களிடம் கனி வாகப் பேசப்பாருங்கள். புது ஒப்பந்தங்கள் தொடர்பாக பத்திரத்தில் கையெழுத்துப் போடும்போது கவனம் தேவை. ஏற்றுமதி, இறக்குமதி வகைகளால் ஆதாயம் உண்டு. பங்குதாரர்கள் உதவியாக இருப்பார்கள். ஜூன், ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் புது ஏஜென்சி எடுப்பீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். சட்டத்திற்கு புறம்பான வகையில் உங்களை சிலர் அழைத்துச் செல்லக்கூடும். ஏமாறாதீர்கள்.

உத்தியோகத்தில் இரவு பகலாக உழைத்தும் நல்ல பெயர் இல்லையே என்ற ஆதங்கம் அடிமனதில் இருக்கும். மூத்த அதிகாரிகளை ஆலோசித்து முடிவுகள் எடுப்பது நல்லது. முக்கிய கோப்புகளைக்கையாளும் போது அலட்சியம் வேண்டாம். நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தாலும் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. சக ஊழியர்கள் மத்தியில் தற்பெருமைப் பிரச்சினை வந்து நீங்கும். ஒகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் புதுவேலை கிடைக்கும். கன்னிப்பெண்கள் மற்றவர்களின் பேச்சை முழுமையாக நம்ப வேண்டாம். சில சமயங்களில் உங்களுடன் நட்பு பாராட்டுவது போல் நடித்து உங்களை ஏதேனும் பிரச்சினைகளில் சிக்க வைப்பார்கள். கவனம் தேவை. மன உளைச்சல், தூக்கமின்மை வந்து நீங்கும்.

மாணவ-மாணவிகளே! படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். மந்தம், மறதி வந்து நீங்கும். அதிகாலையில் எழுந்து படிப்பது நல்லது. நண்பர்களுடன் அளவாகப் பழகுங்கள். தயக்கம் காட்டாமல் ஆசிரியரிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அரசியல்வாதிகளே! தகுந்த புள்ளி விவரம் இல்லாமல் எந்த அறிக்கையும் விட வேண்டாம். கலைஞர்களே! உங்களை சிலர் விமர்சித்துப் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள். அதையும் தாண்டி முன்னேறு வீர்கள். போராடி, படைப்புகளை வெளியி டுவீர்கள். விவசாயிகளே! வாய்க்கால், வரப்புத் தகராறு தீரும். புதுரக விதைகள் மூலம் வசூலைப் பெருக்குவீர்கள்.

இந்த குருப் பெயர்ச்சி தொடக்கத்தில் உங்களுக்குத் தொந்தரவுகள் தந்தாலும், மே மாதத்திலிருந்து எதிர்பாராத திடீர் திருப்பங்களையும், அதிரடி முன்னேற் றங்களையும் தருவதாக அமையும். ** **

## மிதுனம்

நீரோட்டத்திற்கு எதிர் திசையில் செல்லும் மீன்களைபோல் வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடிப்பதில் வல்லவர்கள் நீங்கள். ஆகாயக்கோட்டை கட்டாமல் யதார்த்தமாக யோசிப்பீர்கள். தன் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு முன் அதனால் ஏற்படப் போகும் நல்லது கெட்டதை அலசுவீர்கள். உயிர் நண்பனாக இருந்தாலும் ஒழுக்கம் தவறினால் உதறித் தள்ளுவீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு 15.12.2009 முதல் 21.11.2010 வரை உள்ள கால கட்டத்தில் குருபகவான் என்ன செய்யப் போகிறார்?

இதுவரை உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் நீசம் பெற்று அமர்ந்து கடுமையான செலவுகளையும், ஏமாற்றங்களையும் கணவன்-மனைவிக்குள் சண்டை, சச்சரவுகளையும் வீண் சந்தேகங்களையும் தந்த குருபகவான் இப்போது உங்களின் யோக வீடான 9ஆம் வீட்டில் அமர்வதால் தொட்டது துலங்கும். வரவேண்டிய பணம் கைக்குவரும். பிரபலங்களுடன் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். விலகி நின்ற உறவினர்கள், நண்பர்கள் வலிய வந்து பேசுவார்கள். கஷ்டப்பட்டு உழைத்த காசையும் வெளியில் கொடுத்து ஏமாந்தீர்களே! இனி அந்தப்பணம் கைக்கு வரும். தவறு செய்யாமலேயே தண்டனை அனுபவித்தீர்களே! அந்த அவலநிலை மாறும். சில பிரபலங்கள் உங்களுக்கு உதவுவதாக சொன்னார்கள். ஆனால், நேரில் சென்று பார்த்தபோது ஒதுக்கித் தள்ளினார்களே! இனி அவர்களும் வியக்கும்படி சாதனை புரிவீர்கள்.

15.12.2009 முதல் 03.05.2010 முடிய உள்ள காலகட்டங்களில் புதிய முயற்சிகள் வெற்றியடையும். அதிகமாக உழைத்தும், சேமிக்க முடியாதபடி செலவுகள்தானே இருந்தது? இனி அந்த அவலநிலை மாறும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். தந்தையின் உடல் நிலை சீராகும். சொத்து சம்பந்தப்பட்ட பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். நல்ல வேலையில் அமர்வீர்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை அடைவீர்கள்.

குடும்பத்தினருடன் கொஞ்சம் ஒதுங்கியிருந்தீர்களே! இனி ஒற்றுமை பிறக்கும். சின்னச் சின்ன வேலைகளை முடிப்பதில்கூட சிக்கல்கள் வந்ததே! இன்று முதல் முயற்சியிலேயே வெற்றிகிட்டும். வாகனப்பழுது நீங்கும். வெகுநாள்களாக போக வேண்டுமென்று நினைத்திருந்த கோயிலுக்குச்சென்று வருவீர்கள். நேர்த்திக் கடனை முடிப்பீர்கள். உங்களால் பயனடைந் தவர்கள் இப்பொழுது உதவுவார்கள். ஆன்மிக வாதிகள், சித்தர்களின் தரிசனம் கிடைக்கும். அண்டை அயலார் உதவுவார்கள்.



குருபகவான் ஐந்தாம் பார்வையால் உங்கள் ராசியைப் பார்ப்பதால் சோர்ந்திருந்த உங்கள் முகம் மலரும். சுறுசுறுப்படைவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நீங்கும். சருமநோய் குணமாகும். 7ஆம் பார்வையால் மூன்றாம் வீட்டை குரு பார்ப்பதால் தைரியம் பிறக்கும். இளைய சகோதர வகையில் உதவி உண்டு. அவரே 9ஆம் பார்வையால் 5ஆம் வீட்டை பார்ப் பதால் கனவுத்தொல்லைகள், தூக்கமின்மை, யார் மீதும் நம்பிக்கை இல்லாத நிலை நீங்கும்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்கள் யோக மற்றும் லாபாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் பயணங்களும் செலவுகளும் ஒரு பக்கம் இருந்தாலும் எதிர்பாராத பணவரவு உண்டு. பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். புதுவீடு வாங்குவீர்கள். அரசுக் காரியங்களில் வெற்றி கிட்டும். தாயாருடன் இருந்த மோதல்கள் நீங்கும். உறவினர்கள் சிலர் வலிய வந்து உறவா டுவார்கள். சகோதரிக்கு இருந்த பிரச்சினை தீரும்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபக வான் செல்வதால் புதிதாக ரி.வி.,பிரிட்ஜ் போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். வீட்டை விரிவுபடுத்துவீர்கள். வேற்று மதத்தினரால் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்தில் இருந்த வில்லங்கம் விலகும். மகனுக்கு வெளிநாடு செல்ல விசா கிடைக்கும்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் சப்தம ஜீவனாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்கால கட்டத்தில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். நாடாளுபவர்கள் உதவுவார்கள். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். கைமாற்றாகப் கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். இளைய சகோதரர் உதவுவார். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் சென்று அமர்வதால் பெயர், புகழ், கௌரவம் குறையும். யாருக்காகவும் பிணை, உறுதிப்படுத்தும் கையெழுத்துப் போடாதீர்கள். வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். வாகன விபத்துகள், உத்தியோகத்தில் வீண்பழி, பிரபலங்களுடன் மோதல்கள், தாழ்வுமனப்பான்மை வந்து நீங்கும். உறவினர்களுடன் உரசல்கள் வந்து நீங்கும்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உங்களின் அஷ்டம, பாக்கியாதிபதியான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் யோகம் உண்டாகும். ஆனால் உடல் அசதி, சோர்வு, அல்சர் வந்து நீங்கும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாளுங்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். இக்காலகட்டத்தில் குருபகவான் 10ஆம் வீட்டில் செல்வதால் கௌரவப் பதவிகள் தேடிவரும். ஆனால் உங்களைப் பற்றிய வீண் வதந்திகளும் வரும். தந்தையுடன் கருத்துமோதல் ஏற்படும். சொத்து வாங்கும்போது பத்திரத்தைப் பரிசோதித்துப்பார்த்து வாங்குங்கள். ஆன்மிகப் பெரியோர்களின் ஆசி கிட்டும். அக்கம்- பக்கம் வீட்டாரிடம் குடும்ப அந்தரங்க விஷயங் களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். விலகிச்சென்ற நல்ல வேலையாள்கள் மீண்டும் உங்களைத் தேடி வருவார்கள். வாடிக்கையாளர்களை கவரக் சில சலுகைகளை அறிவிப்பீர்கள். வெளிநாட் டுத் தொடர்புடைய நிறுவனத்துடன் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

புதுக் கிளைகள் தொடங்குவீர்கள். பங்குதாரர்கள் உங்க ளுக்கு முக்கியத்துவம் தருவார்கள். காணி விற்றல், ஹோட்டல், சிமெந்து, மணல், கம்பனி மூலம் லாபம் வரும். மார்ச், ஏப்ரல், நவம்பர் மாதங் களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

உத்தியோகத்தில் ஏற்பட்ட அவமானங் கள் நீங்கும். உங்களை நம்ப சில ரகசியப் பொறுப்புகளை ஒப்படைக்கும் அளவிற்கு அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். சக ஊழியர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும். மார்ச், ஏப்ரல் மாதங்களில் சம்பளம், பதவி உயர்வு உண்டு. அலுவலகத்தில் உங்களை சிலர் சண்டைக்காரர்களாக பார்த்தார்களே! இனி சந்தோஷமாகப் பேசுவார்கள். ஆனால் 04.05.2010 முதல் 06.11.2010 வரை உங்களின் உத்தியோகஸ்தானத்தில் குரு அமர்வதால் வேலைச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளுடன் மனத்தாங்கல் வரும். சிலருக்கு இடமாற்றம் வரும்.

கன்னிப் பெண்களே! காதல் கனிந்து வரும். ஊரே மெச்சும்படி கல்யாணம் நடக்கும். தோற்றப்பொலிவு கூடும். உயர்கல்வியை நல்ல விதத்தில் முடிப்பீர்கள். மாதவிடாய்க்கோளாறால் ஏற்பட்ட வயிற்றுவலி நீங்கும். பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். நீங்கள் விரும்பியதை வாங்கித் தருவார்கள்.

மாணவ-மாணவிகளே! படிப்பில் இருந்த மறதி, அலட்சியம் இனி விலகும். ஆர்வம் பிறக்கும். வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பீர்கள். உங்களை விட்டு விலகிய நண்பர்கள் உங்களைத் தேடி வருவார்கள். ஓவியம், இசை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு, பாராட்டு பெறுவீர் கள். ஆசிரியரின் அன்பைப் பெறுவீர்கள்.

கலைஞர்களுக்கு, பழைய நிறுவனங்களிடமிருந்து அழைப்பு வரும். கிசுகிசுத் தொல்லைகள் குறையும்.

விவசாயிகளே! சூரியகாந்தி, எள், ஆமணக்கு, நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள் மூலம் அதிக ஆதாயமடைவீர்கள்.

அரசியல்வாதிகளே! எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் நண்பர்களாவார்கள். தலைமையின் குடும்ப விஷயங்களில் தலையிடும் அளவிற்கு நெருக்கமாவீர்கள்.

இந்த குரு பெயர்ச்சி வருமானத்தையும், வசதி, வாய்ப்புகளையும் அதிகரிக்கச் செய்வதுடன் புதிய முயற்சிகளில் வெற்றியையும் அள்ளித்தரும். ** **

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிரதேச விளையாட்டுக்கழகம் நடத்திய 2009 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வு அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன், வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, பிரதம நிறைவேற்று அதிகாரி பி.வி.பத்திரன, சர்வதேச வர்த்தகம் மற்றும் திறைசேரி சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ்.வசந்தகுமார், மக்கள் வங்கியின் விளையாட்டுக் கழகச்செயலாளர் அஜித் ரட்ணாயக்க ஆகியோர் மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டிப்பதனை முதற்படத்திலும்,

பிரதம நிறைவேற்று அதிகாரி பி.வி.பத்திரன, யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பீடாதிபதி என். நடராஜசுந்தரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதனை இரண்டாம், மூன்றாம் படங்களிலும் மக்கள் வங்கியின் யாழ்.பிரதேச விளையாட்டுக்கழக அணிகளை இறுதிப்படத்திலும் காணலாம்.

*(படங்கள்: உமா,சுகந்தன்,தமிழினியன்)*

# வடமாகாண விளையாட்டு விழாவில் யாழ்.ஆசிரியர்கள் பதக்கங்களை வென்றனர்

## அருணோதயா ஆசிரியர் பாகீஸ்வரன் சம்பியன்

வலி.வடக்கு,டிசெ.17

வட மாகாணக் கல்வித் திணைக்களம் ஆசிரியர்களுக்கு இடையே நடத்திய விளையாட்டுப் போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் ரி.பாகீஸ்வரன் சம்பியன் வென்றார்.

திருகோணமலை 'வெபர்' விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆறு பதக்கங்களை வென்றனர்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் ரி.பாகீஸ்வரன் தட்டெறிதல், குண்டெறிதல், ஈட்டி எறிதல் ஆகிய மூன்று போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கங்களைப் வென்று சம்பியனானார்.

இவர் பாடசாலைக் காலத்தில் தேசிய மட்டத்திலும் வெற்றி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சி.கமலமோகன் உயரம் பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

. இவரும் பாடசாலைக் காலத்தில் தேசிய மட்டத்தில் வெற்றிபெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் ஆர்.இராஜகாந்தன் தட்டெறிதலில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.உதயன் ஈட்டி எறிதல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி முத்துக்குமாரசுவாமி ஆசிரியர் பி.பிரதீப்குமார் 30 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான குண்டெறிதல், தட்டெறிதல் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றுத் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

இவரும் கடந்த காலத்தில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் பி.பாலேந்திரா 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

(50-86)

# கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் அணிகளுக்கு இடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரிக் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள பெண் அணிகளின் விவரம் வருமாறு:

கே.கே.எஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பட்டபிளை 'பி' விளையாட்டுக் கழகம். (50-23)






வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 12 வயதுப் பிரிவு பெண்களுக்கான தாச்சிப் இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயமும் காங்கேசன்துறை விமன்காமம் வித்தியாலயமும் மோதிக்கொள்வதைப்படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# மக்கள் வங்கியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் கொழும்பில்

யாழ்ப்பாணம், டிசெ.17

மக்கள் வங்கியின் பிரதேச காரியாலயங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய கிரிக்கெட்,வலைப்பந்தாட்ட அணிகள் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு புறப்படவுள்ளன என மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே. பத்மநாதன் தெரிவித்தார். (50-23)

# பண்டத்தரிப்பு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரிக் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பமிலியன்ஸ் 'பி' விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பமிலியன்ஸ் 'பி' விளையாட்டுக்கழக அணியை 21:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. (50- 23)

# மக்கள்வங்கியின் விளையாட்டுக் கழகம் நடத்திய போட்டியில் வெற்றி பெற்றோர்

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிரதேச விளையாட்டுக்கழகம் நடத்திய 2009 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வெற்றிபெற்றோர் விவரங்கள் வருமாறு-

**ஊழியர்களின் பிள்ளைகளுக்கான போட்டி**

**5 வயதுப்பிரிவு - இனிப்பு ஓட்டம்**

முதலாமிடம்-ராகினி, 2 ஆம் இடம்-சாரங்கா, 3 ஆம் இடம்-லக்ஸ்சன்.

**5 வயதுக்கும் 10வயதுக்கும் இடைப்பட்டோருக்கான பலூன் ஓட்டம்**

முதலாமிடம்-சந்தியன், 2ஆம் இடம்-பிரவினா, 3ஆம் இடம்-பிரசன்னா.

**10 வயதுக்கும் 15வயதுக்கும் இடைப்பட்டோர்**

முதலாமிடம்-விதுனன், 2ஆம் இடம்-கௌசினி, 3ஆம் இடம்-சிறிஸ்காந்தன்.

**ஊழியர்களுக்கு இடையிலான போட்டிகள் 30 வயதுக்குட்பட்டோர் (ஆண்கள்) 400 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம்- கே.அஜந்தன் (யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை), 2ஆம் இடம்-எஸ்.சுஜன், (சுன்னாம் மக்கள் வங்கி), 3ஆம் இடம்- பி.கஜேந்திரன்-(ஸ்ரான்லி வீதி, மக்கள்வங்கிக்கிளை).

**400 மீற்றர் ஓட்டம் பெண்கள்**

முதலாமிடம் -ஆர்.பிரியதர்சினி (ஸ்ரான்லிவீதி, மக்கள்வங்கிக்கிளை), 2ஆம்இடம்-எம்.கேமபிரியா (சுன்னாகம் மக்கள் வங்கி), 3ஆம் இடம்-எஸ்.துவாரகா (ஸ்ரான்லி வீதி, மக்கள்வங்கி).

**30 வயதுக்கு மேற்பட்டோர் 400 மீற்றர் ஓட்டம் (ஆண்கள்)**

முதலாமிடம் - ரி.யோண்சன் (ஜே.ஆர்.எச்.ஓ), 2ஆம் இடம்- எஸ்.தேவகுமாரன் (சுன்னாகம் மக்கள் வங்கி), 3ஆம் இடம்-சின்னராஜா (யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கி).

**பெண்கள்**

முதலாமிடம் - வி.பிரியதர்சினி (யாழ். பல்லைக்கழக மக்கள் வங்கி).

**30வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டோர்**

**100மீற்றர் ஓட்டம் ஆண்கள்**

முதலாமிடம்- ரி.யோண்சன் (ஜே.ஆர்.எச்.ஓ), 2ஆம் இடம்-ரி.சின்னராஜா (யாழ்.பல்கலைக்கழக மக்கள்வங்கி), 3ஆம் இடம்-என்.பாலமுரளி (யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி)

**50வயதுக்கு மேற்பட்டோர் நூறு மீற்றர் ஓட்டம் ஆண்கள்**

முதலாமிடம்இடம்-எ.தேவகுமாரன் (சுன்னாகம் மக்கள் வங்கி), 2ஆம் இடம்-எஸ்.ராஜேந்திரம் (சுன்னாகம் மக்கள் வங்கி), 3 ஆம் இடம் - வி.அரியகரசிவம் (முல்லைதீவு மக்கள் வங்கி).

**வெளிக்கள அலுவலர்கள் 400மீற்றர் ஓட்டம் ஆண்கள்**

முதலாமிடம்-ஜே.சிவகுமாரன் (சுன்னாகம் மக்கள் வங்கி), 2ஆம் இடம்-பி.துரைக்காந்தன் (சுன்னாகம் மக்கள் வங்கி), 3ஆம் இடம்-பீ.புவிராஜ் (யாழ். பிரதான வீதி, மக்கள் வங்கி).

**கிரிக்கெட் ஆண்கள்**

முதலாமிடம்-காங்கேசந்துறை - சுன்னாகம் மக்கள் வங்கிகளின் அணி, 2ஆம் இடம் -ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி அணி.

**வலைப்பந்தாட்டம் பெண்கள்**

முதலாமிடம்-காங்கேசந்துறை - சுன்னாகம் மக்கள்வங்கி அணி, 2ஆம் இடம்-ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி.

**கயிறு இழுத்தல் ஆண்கள்**

முதலாமிடம் - காங்கேசந்துறை, சுன்னாகம் மக்கள் வங்கிகளின் அணி, 2ஆம் இடம் - யாழ். பல்கலைக்கழக - பிரதான வீதி மக்கள் வங்கிகளின் அணி.

**கயிறு இழுத்தல் பெண்கள்**

முதலாமிடம்- ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி அணி, 2 ஆம் இடம் சாவகச்சேரி -ஊர்காவற்றுறை மக்கள் வங்கிகளின் அணிகள்.

**கிரிகெட் காட்சிப் போட்டி ஆண்கள்**

முதலாமிடம்- யாழ்.பிராந்தியம், 2ஆம் இடம்- வன்னிப்பிராந்தியம்,

**வலைப்பந்தாட்டம் காட்சிப்போட்டி பெண்கள்**

முதலாமிடம்- யாழ்.பிராந்தியம், 2ஆம் இடம்- வன்னிப்பிராந்தியம்.

**கயிறு இழுத்தல்**

முதலாமிடம்- யாழ்.பிராந்தியம், 2ஆம் இடம்- வன்னிப்பிராந்தியம்

**சங்கீதக்கதிரை ஆண்கள்**

முதலாமிடம்- எஸ்.துரைராஜன் (சுன்னாகம் மக்கள் வங்கி).

**சங்கீதக்கதிரை பெண்கள்**

முதலாமிடம்- [illegible].சிந்துஜா (யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கி).

(50-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Spoken English
(Elocution)

பேச்சு ஆங்கிலம் எழுத்து, இசை, நாடக வகுப்புக்கள்

ஆசிரியர்:
திருமதி கி.சித்திரவேல்

ஆரம்பம் : 23rd December 2009
நேரம் : 3.30 pm
இடம் : Smart Kids, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

15 வயதிற்கு உட்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

Smart Kids, Thirunelvely


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
சுப்பிரமணியம் தெய்வநாயகி
(தங்கமுத்து)

மலர்வு: 13.02.1932 திதி:
உதிர்வு: 18.11.2009 துதியை

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மற்றும் நேரில் வந்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த (18.11.2009) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பவிளக்கு திருமதி சுப்பிரமணியம் தெய்வநாயகி அவர்களின் அந்தி யேட்டிக் கிரியைகள் நாளை (18.12.2009) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அன்னை இல்லம்',
மந்துவில் மேற்கு, கொடிகாமம். (சி/563311) குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
N.சர்வானந்தன் கிராம அலுவலர்
(J/177,J/180) அவர்களின் அன்புத்தாயார்
அமரர் நவரத்தினம் செல்வநாயகி
அவர்கள் 14.12.2009 திங்கட்கிழமை இறைபதம் எய்தியமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேசசெயலரும்
நலன்புரி சங்க அனைத்து
அங்கத்தவர்களும்.

பிரதேச செயலகம்,
வலி.மேற்கு, சங்கானை (சி/563312)

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் ஜெயரட்ணசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், சென்.மேரிஸ் மகா வித்தியாலயம் (OLR)



யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ஜெயரட்ணசிங்கம் 15.12.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயரஞ்சினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - அன்னலஷ்மி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை-திரவியம் தம்பதியினரின் மருமகனும், ஜனாளினி, மகிந்தன் (பிரான்ஸ்), தர்சிகா, பாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநாயகம், இராசநாயகம் (டென்மார்க்), தையல்நாயகி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தற்காலிக முகவரி:
173, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (91503)
தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா பாலநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் தற்பொழுது ஏழாலை வடக்கு, இலந்தைகட்டி வைரவர் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா பாலநாதன் 15.12.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சர்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா -செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கனகரத்தினம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சோமசுந்தரம், காலஞ்சென்ற புட்கலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும், ஜெயவதனி, காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் ஜெயகுமார், ஜெயமோகன், ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தனேஸ்வரராஜா, சரோஜினி ஆகியோரின் மாமனும், ஔடதன், பவித்திரன், சபிசன், மீனாஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இலந்தைகட்டி வைரவர் கோவிலடி,
ஏழாலை வடக்கு, ஏழாலை. (சி/563310)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மீளக்குடியமர்ந்தோருக்கு உதவிப் பொருள்கள்

நல்லூர்,டிசெ.17

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனத்தின் உதவிப் பொதிகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஜே-91, ஜே-92, ஜே-93, ஜே-94, ஜே - 95, ஜே-96, ஜே-106, ஜே - 107, ஜே - 108, ஜே - 109, ஜே 114 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சட்டநாதர் கோயிலடியில் உள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்திலும் ஜே - 97, ஜே - 98, ஜே - 99, ஜே - 100, ஜே - 101, ஜே - 115, ஜே - 116, ஜே - 117, ஜே - 118, ஜே - 119 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயிலடியிலும் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து ஏற்கனவே வழங்கப்பட்ட பொருள்களை தவறவிட்டவர்களும் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-111)

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு

யாழ்ப்பாணம்,டிசெ. 17

யெகோவாவின் சாட்சிகள் மாவட்ட மாநாடு 'விழிப்புடன் இருங்கள்' என்னும் பொருளில் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9.20 இற்கு ஆரம்பமாகும் மேற்படி மாநாட்டில் நாளை 'நீங்கள் தயாராக இருங்கள்' என்னும் பொருளிலும், சனிக்கிழமை 'தெளிந்த புத்தியுடன் விழிப்பாயிருங்கள்' என்ற பொருளிலும், ஞாயிற்றுக்கிழமை 'எதிர்பார்த்துக்காத்திருங்கள் கடவுள் சொன்ன வாக்குறுதி தாமதிப்பதில்லை' என்னும் பொருளிலும் பல்வேறு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படவுள்ளன.

(50-16)

## ஏ -9 வீதியில் உணவுச்சாலைகளை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ. 17

தற்போது வவுனியா, கொழும்பு ஆகிய பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் அதிகாலையிலேயே தமது பயணத்தைத் தொடர்வதால் அவர்களுக்கான உணவு, சிற்றுண்டி என்பவற்றை இடைவழியில் பெற்றுக்கொள்ள உணவுச்சாலைகள் இல்லாமையால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். மாங்குளத்தில் ஒரேயொரு உணவுக்கடை மாத்திரமே இருப்பதனால் அனைத்து மக்களும் தமது உணவுதேவையைப் பூர்த்தியாக்க முடியாமலுள்ளது. ஏற்கனவே முறிகண்டி பகுதியில் பஸ்கள் தரித்து நின்று செல்வது போன்று ஏனைய இடங்களிலும் உணவுச்சாலைகளை அமைக்க அனுமதியளித்து மக்கள் அவதியின்றி தமது பயணத்தைத் தொடர உரியவர்கள் ஆவன செய்யவேண்டும் என்றும் அந்த இடங்களில் மலசல கூட வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் மக்கள் கேட்டுள்ளனர்.

(4-341)

## நிவாரணம் இன்மையால் மக்கள் அவதி

வுவனியா,டிசெ.17

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வவுனியாவில் உறவினர் வீடுகளில் தங்கிவாழும் மக்களுக்கு இதுவரையும் நிவாரணம் வழங்கப்படாமையால் அவர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகியுள்ளது. அவர்கள் மீளக் குடியமரும் வரை நிவாரணம் வழங்கப்பட உரிய அதிகாரிகள் ஆவன செய் [illegible] கள் -கோரியுள்ளனர்.

(04-341)


## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

வெற்றிடங்கள்:
கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள் 50)
(யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சங்கானை, தெல்லிப்பளை மற்றும் மன்னார் மாவட்டம்)

கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்:-
க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
a) இளைப்பாறிய பொலிஸ்/ படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
b) தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: மேற்கூறப்பட்ட தகைமை (a+b) உடையவர்களுக்கு தகைமையில் விலகல் அளிக்கப்படும்.
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
உயரம் 5'4"
மார்பு 32"
வயதெல்லை: 22 வயதிற்கு மேற்பட்டோர்
சம்பளம்: மாதமொன்றுக்கு எல்லாக் கொடுப்பனவுகளும் (E.P.F&ETF) உட்பட ரூபா 10 000/= பெற்றுக் கொள்ளலாம்.
நேர்முகப் பரீட்சை 19.12.2009 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
1.கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
2.வதிவிடச் சான்றிதழ் 3.பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4.கல்வித் தராதரப் பத்திரங்கள் 5.தேசிய அடையாள அட்டை
6.குடும்ப அட்டை
இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டு வரவும்.

337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/563307) பணிப்பாளர்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1148 நீலம்

வெற்றி இலக்கங்கள்
கன்னி 10 37 47 54
15-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 7,693,225/- வெல்லப்படவில்லை

| இணையும் -இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 212,648 | 20/- | 4,252,960/- |
| 2 இலக்கங்கள் | 19,084 | 40/- | 763,360/- |
| 1 இல. + லக்கினம் | 19,232 | 60/- | 1,153,920/- |
| 2 இல. + லக்கினம் | 1,794 | 200/- | 358,800/- |
| 3 இலக்கங்கள் | 512 | 1000/- | 512,000/- |
| 3 இல. + லக்கினம் | 34 | 10,000/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,693,225/- | - |
| மொத்தம் | | | 7,981,040/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 253,312 | | 8,481,040/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,172,975/-

ஆலிந்தயே வாசனாவ
தங்கக்காசு வெற்றியாளர் : சஜீவா ரத்நாயக்க தங்காலை
கைத்தொலைபேசி வெற்றியாளர்: கே.ஏ.இந்திராவதி வரக்காபொல

2009 டிசெம்பர் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 400794504-4-01 |
| கண்டி | 400784964-6-22 |
| கம்பஹா | 400800553-2-43 |
| மாத்தளை | 400784793-8-24 |
| காலி | 400794738-4-48 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை



## Uduvil Girls' College

THE TRUTH SHALL MAKE YOU FREE · UDUVIL · AD 1824

### Spoken English Exam

Student's who have registered for the spoken English Exams through **Uduvil Girls' College** are kindly requested to be present in School on ***18 th December*** to meet the teachers in charge.

***Principal***


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எனக்குப் பிடித்த ஆட்டம்!



''நேற்று முன்தினம் நடந்த இலங்கையுடனான போட்டியே ஒரு நாள் கிரிக்கெட்டில் சிறந்த பெறுபேறு ஆகும். இதுவே எனக்குப் பிடித்த ஆட்டம்'' - இவ்வாறு இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரான ஷேவாக் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை யுடனான பேட்டியில் ஷேவாக் அபாரமாக ஆடி 146 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதுகுறித்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கையுடனான இன்னிங்ஸே எனது சிறப்பான இன்னிங்ஸ் ஆகும். இதற்கு முன்பு 130 ஓட்டங்களை எடுத்ததே எனது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது. ஒரு நாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களின் விளையாட்டாகும். இந்தப் போட்டி நடந்த ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதமானதாக இருக்கிறது. இருப்பினும் நெஹ்ரா தனது கடைசி 5 ஓவர்களில் 28 பந்துகள் வரை யோர்க்கராக வீசி இலங்கை அணியைக் கட்டுப்படுத்தினார். சஹீர்கானும் தனது பந்து வீச்சில் நிறைய 'யோர்க்கர்' போட்டார். இது அணியின் வெற்றிக்கு உதவிகரமாக இருந்தது.

''துடுப்பாட்ட 'பவர் பிளே'யில் இலங்கை அணியின் தலைவர் சங்கக்காரவும், டில்ஷானும் ஆட்டம் இழந்தமையானது ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது. அவர்கள் இருவரும் அருமையாக துடுப்பெடுத்தாடிய விதத்தைப் பார்த்தபோது, நாங்கள் தோற்றுவிடுவோம் என்று நினைத்தோம். ஆனால், அத்தகைய நிலையில் அவர்களை வீழ்த்தியமையானது, நமக்குச் சாதகமாகத் திரும்பியது. நான் மட்டும் தனி வீரராக நின்று அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்லவில்லை. இது கூட்டு முயற்சிக்குக்

**விளையாட்டு அரங்குகளில்**

# இலங்கையின் ஆட்டத்தைப் பார்த்து மிகவும் பதற்றமடைந்தேன்-டோனி

ராஜ்கோட், டிசெ. 17

''400 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தும் - இலங்கை அணியின் அபார ஆட்டத்தைப் பார்த்து - தோல்வியை நெருங்கியமையால் அதிக பதற்றம் அடைந்தேன்.''

- இவ்வாறு இந்திய அணியின் தலைவர் டோனி கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பரபரப்பாக நடந்து முடிந்த அந்த ஆட்டம் குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கை அணி துடுப்பெடுத்தாடியபோது முதல் 35 ஓவர்கள் வரை அவர்களே ஆதிக்கம் செலுத்தினர். ஒரு கட்டத்தில் முக்கியமான விக்கெட் விழுந்தபோது அதை நாம் சரியாக பயன்படுத்திக் கொண்டோம். கடைசி நேரத்தில் சஹீர்கான், நெஹ்ரா ஆகியோர் சிறப்பாகப் பந்து வீசினார்கள். அவர்கள் எமது வெற்றியில் முக்கியமான பங்கு வகித்தனர்.

''இந்தப் போட்டியில் நான் அதிகமாக பதற்றமடைந்தேன். 400 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தும் கிட்டத்தட்ட தோல்வியை நெருங்கியமையால் மிகவும் பதற்றம் அடைந்தேன். இந்த நேரத்தில் அமைதியாகப் பணியாற்றுவது என்பது கடினமே'' - இவ்வாறு டோனி கூறினார்.

# மே.இ. தீவுகளுக்கு எதிராக ஆஸ்திரேலி... 339/3

## வோட்ஷன்-ஹடிச் சிறப்பான ஆரம்பம்

ஆஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 339 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

ஆஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடக்களமிறங்கியது. ஆரம்ப வீரர்களாக ஷேன் வோட்ஷன் மற்றும் ஹடிச் ஆகியோர் களமிறங்கி, பலமான ஆரம்பத்தைக் கொடுத்தனர்.

சிறப்பாக ஆடிகொண்டிருந்த இந்த ஜோடியை ரோஜ் பிரித்தார். 89 ஓட்டங்களைப் பெற்றவேளை ஷேன்வோட்ஷன் ஆட்டமிழந்தார். இவர் 130 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் உள்ளடங்கலாக அந்த ஓட்ட எண்ணிக்கையைச் சேர்த்தார்.

அடுத்து வந்த பொண்டிங் சிறிது நேரம் ஆடிவிட்டு 23 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டத்தைக் கைவிட்டு வெளியேறினார்.

அவர் சென்றதும் களம்புகுந்த ஹஸி தனது விளையாட்டைக் காட்டத் தொடங்கினார். மறுமுனையில் நின்ற ஹடிச் சதமடிக்கும் வாய்ப்பை ஓர் ஓட்டத்தால் தவறவிட்டார். அவர் 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை பெய்ன் அவரை வீழ்த்தினார். இவர் 177 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக தனது ஓட்ட எண்ணிகையைச் சேர்த்தார்.

அடுத்து வந்த கிளார்க், 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து வந்த நார்த், மறுமுனையில் நின்ற ஹஸியுடன் இணைந்து நிதானமாக ஆடிக்கொண்டிருந்தார்.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 339 ஓட்டங்களைப் பெற்றது.

ஹஸி 81 ஓட்டங்களுடனமும் நார்த் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில் ரோஜ், பெய்ன், டியோனறின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

# இந்தியாவுடன் டெஸ்ட் விளையட தென்னாபிரிக்கா அணி சம்மதம்

மும்பை, டிசெ. 17

அடுத்த வருடம் பெப்ரவரியில் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்கா அணி, 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது. இது தவிர, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் பங்கேற்கிறது.

முன்னர் இந்தியக் கிரிக்கெட் சபை, தென்னாபிரிக்காவை இந்திய அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது. இதற்கு தென்னாபிரிக்க வீரர்களும் விருப்பம் தெரிவித்திருந்தனர். இதுகுறித்து தென்னாபிரிக்கா தீவிர பரிசீலனை செய்துவந்தது.

இந்நிலையில், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இந்தியாவுடன் டெஸ்ட் போட்டிகளை விளையாடுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது. இதன்படி அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரை இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

# பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல் 37 பேர் பலி; 60 பேர்வரை காயம்!


குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் பெரும் குழி ஏற்பட்டுள்ளதை மக்கள் அதிர்ச்சியுடன் பார்க்கின்றபோது...

இஸ்லாமாபாத், டிசெ. 17

மத்திய பாகிஸ்தானின் டேரா ஹாஷி கான் நகர சந்தைப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 37 பேர் கொல்லப்பட்டனர். அறுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கட்டடங்கள் இடிந்து விழுந்தன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''குண்டுவெடித்ததும் முழுச் சந்தைக் கட்டடமும் சரிந்து விழுந்தது. கரும்புகை மண்டலம் எழுந்தது. மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். மனித அவயவங்கள் இரத்த வெள்ளத்தில் சிதறிக் கிடந்தன'' என உள்ளூர்வாசியான ரஸா கான் ஏ.பி. செய்தி நிறுவனத் துக்குத் தெரிவித்தார்.

''இக்குண்டுவெடிப்பில் அக்கம் பக்கக் கட்டடங்களும் இடிந்து விழுந்துள்ளன. இன்னும் சில கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இடிபாடுகளுக்குள் இன்னும் பலர் சிக்குண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மக்கள் நடமாட்ட மிகுந்த வேளையில் சக்திமிக்க இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது'' என பிரதம பொலிஸ் அதிகாரி முபாரக் அலி தெரிவித்தார்.

''இக்குண்டுவெடிப்பில் அநேக கடைகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. மசூதியொன்று பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. பாரந்தூக்கிகள், புல்டோசர்கள், கனரக இயந்திரங்கள் ஆகியவற்றின் உதவியோடு, கட்டட சிதைவுகள் சீமெந்து தூண்கள் ஆகியவை அகற்றப்படுகின்றன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''மாகாண அதிகாரி ஒருவரை இலக்கு வைத்து இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், அவர் இத்தாக்குதலிலிருந்து தப்பியுள்ளார். டேரா ஹாஷி கானுக்கு அருகிலுள்ள பிராந்தியத்திலேயே இராணுவம் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது'' என நகர ஆணையாளர் ஹஸன் இக்பால் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''குண்டுதாரியின் சிதைந்த உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது பயங்கரவாதத் தாக்குதலாகும். சமீப காலமாக தலிபான் தீவிரவாதிகள் இதுபோன்ற தாக்குதல்களை பரவலாக நடத்தி வருகிறார்கள். இத்தகைய தாக்குதல்களில் இதுவரை நூற்றுக் கணக்கானோர் மடிந்துள்ளனர். அதேபோல பெருந்தொகையானோர் காயமடைந்துள்ளனர்'' என்றும் அவர் விவரித்தார்.

''இக்குண்டுத்தாக்குதலையடுத்து, காணாமற் போன தங்களின் உறவினர்களை அநேகர் தேடுகின்றனர். இவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்குண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நகரிலுள்ள வைத்தியசாலையிலும் பலர் உறவினர்களைத் தேடத் தொடங்கிவிட்டனர்'' என மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் பேர்விஸ் ஹைதர் அல்டாப், ஏ.எவ். பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

டேரா ஹாஷி கான் பிரதி பொலிஸ் அதிபர் ஜெனரல் அல் அதார், சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு வந்து நேரடியாகப் பார்வையிட்டார். அவர் ''இது ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல். இதில் சந்தேகம் இல்லை'' என்றார்.

''நவாஷ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் மூத்த தலைவரான சுல்பிக்கர் கோஸாவின் வீட்டை குறிவைத்தே டேரா காஸிகான் நகர சந்தைப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது'' என பொலிஸ் டி.ஐ.ஜி. முபாரக் அலி அத்தார் மேலும் தெரிவித்தார்.

**உலக அரங்கில்**

# ஆங் சான் சூகிக்கு தமது கட்சியின் அதிகாரிகளைச் சந்திக்க அனுமதி

யங்கூன், டிசெ.17

மியான்மரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சித் தலைவி ஆங் சான் சூகிக்கு தமது கட்சியின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியின்பேரில் ஆங் சான் சூகி நோய்வாய்ப்பட்டுள்ள தமது கட்சியின் மூன்று உச்சமட்ட அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார். இம் மூவரில் இளைய அதிகாரிக்கு வயது 85. மற்றுமிருவரும் இவருக்கு மூத்தவர்களாவர்.

நோய்வாய்ப்பட்டுள்ள இவர்களைச் சந்திப்பதற்கு ஆங் சான் சூகி, அனுமதி கோரி கடந்த மாதம் மியான்மர் இராணுவத் தலைவர் தான் சுவிக்குக் கடிதமெழுதியிருந்தார். இதையடுத்து, இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆங் சான் சூகி, கடந்த 20 வருட காலத்தில் பெரும்பகுதியை வீட்டுக் காவலிலேயே கழித்துள்ளார். இவ்வருட ஆரம்பத்தில் அமெரிக்கர் ஒருவர் ஏரியொன்றை நீந்திக் கடந்து இவரது இல்லத்துக்கு வந்து இவரைச் சந்தித்தமையால் பெரும் பிரச்சினை உருவானது.

அமெரிக்கர் ஒருவர் தடுப்புக்காவலிலுள்ள தம்மைச் சந்திக்க அனுமதித்தமை, தடுப்புக் காவல் விதியை மீறிய ஒரு நடவடிக்கையாகும் என இவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. இது தொடர்பான விசாரணையின் இறுதியில் இவரது தடுப்புக்காவல் மேலும் நீடிக்கப்பட்டது.

# பிலிப்பைன்ஸில் எரிமலை குமுறல்; 20 ஆயிரம் குடிமக்கள் வெளியேற்றம்

மணிலா, டிசெ.17

பிலிப்பைன்ஸிலுள்ள மேயோன் எரிமலை குமுறத் தொடங்கியதை அடுத்து, அதன் மலையடி வாரத்திலிருந்து 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்பாளர்கள் இதுவரை வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

எரிமலைக் குமுறல் எச்சமயத்திலும் உக்கிரமடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், எரிமலை அமைந்துள்ள மலையின் அடியில் சூழ குடியிருக்கும்குடியிருப்பாளர்கள் துரிதமாக வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்.

வெளியேற்றப்பணியில் இராணுவச் சிப்பாய்களும், பொலிஸாரும் கூட்டாக ஈடுபட்டு வருகிறார்கள். குடியிருப்பாளர்கள், பஸ்கள், லொறிகள், ட்ரக்குகள் ஆகிய வாகனங்களில் ஏற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

மேயோன் எரிமலை வாயிலிருந்து தீச்சுவாலைகளோடு புகை மண்டலம் எழுந்த வண்ணமுள்ளது. வாயிலிருந்து குழம்பு பிரவகித்து வழிந்து வருகிறது. இந்த எரிமலை திங்கட்கிழமை குமுறத் தொடங்கியது. அது முதல் இதன் வீறு படிப்படியாக அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவின் தென்-கிழக்கே, 330 கிலோ மீற்றர் (206 மைல்) தொலைவில் மேயோன் எரிமலை அமைந்துள்ளது.

''சாம்பல் குவியல்கள் ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு எழும்பி பரவுகின்றன. பாரிய வெடிப்பு ஏற்படக்கூடிய அறிகுறி உண்டு. அதற்கு முன்னர் (இன்று) வியாழக்கிழமைக்குள் மேலும் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுவிளடுவர்'' என பிராந்திய அனர்த்த நிவாரண சேவைப் பிரிவின் தலைவர் செட்ரிக் டேயிப் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில் காங். எம்.பிக்கள் இடையே மோதல்
# தெலுங்கானாவுக்கு ஜெகன்மோகன் எதிர்ப்பு



ஐதராபாத், டிசெ.17

தனித் தெலுங்கானா விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் எம்.பிக்களிடையே மோதல் ஏற்பட்டது. தெலுங்கானா பிரிவினைக்கு ஆந்திர முன்னாள் முதல்வர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டியின் மகனும், எம்.பி.யுமான ஒய்.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டி எதிர்ப்புத் தெரிவித்தார்.

தனித் தெலுங்கானா விவகாரத்தில் ஆந்திர மாநிலத்தில் கொந்தளிப்பான நிலை உருவாகி உள்ளது.

தெலுங்கானா விவகாரம் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்றுமுன்தினம் எதிரொலித்தது. சட்டசபையை போல், நாடாளுமன்றத்திலும் எம்.பிக்கள் இரு அணியாக பிரிந்து மோதிக்கொண்டனர். நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற மக்களவை கூடியதும், தெலுங்குதேசம் கட்சித் தலைவர் கே.என். ராவ், கட்சியின் மற்ற 3 எம்.பிக்களுடன் தெலுங்கானா விவகாரத்தைக் கிளப்பினார்.

'ஐக்கிய ஆந்திரா வேண்டும்' என்ற பதாகையைத் தாங்கியபடி, அவர்கள் மைய மண்டபத்துக்குச் சென்றனர். கேள்வி நேரம் முடிந்ததும் தனித் தெலுங்கானா மாநிலப் பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்த கே.என். ராவ், இந்த விவகாரத்தில் ஆந்திரா பற்றி எரிகிறது எனக் குறிப்பிட்டார்.

உடனே டாக்டர் எம்.ஜெகநாத் தலைமையில் சில காங்கிரஸ் எம்.பிக்கள் கே.என்.ராவின் தெலுங்கானா எதிர்ப்புப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்தனர். ஆனால், ஒய்.எஸ். ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான மற்றக் காங்கிரஸ் எம்.பிக்கள் ராவின் பேச்சுக்கு ஆதரவு தெரிவித்ததால், ஒரே கட்சியில் இரு பிரிவாக மோதிக்கொள்ளும் சூழ்நிலை உருவானது. இதனால் 15 நிமிடங்களுக்குச் சபை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றக் கூட்டம் முடிந்ததும் ஜெகன்மோகன் ரெட்டி அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

இந்த விவகாரத்தில் தெலுங்கு தேசம் கட்சி மட்டுமே நற்பெயரைத் தட்டிச்சென்று விடக்கூடாது என்பதற்காக நாடாளுமன்றத்தில் அந்த நிலையை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அதேநேரத்தில், ஆந்திராவின் தற்போதைய நிலைமைக்கு தெலுங்கு தேசம் கட்சியும் அதன் தலைவர் சந்திரபாபு நாயுடுவும் தான் காரணம். தெலுங்கானாப் பிரிவினைக்கு முதலில் நாயுடுவும், பிரஜாராஜ்ஜியம் கட்சித் தலைவர் சிரஞ்சீவியும் ஆதரவு தெரிவித்து இருக்காவிட்டால் நிலைமை இந்தளவுக்கு போயிருக்காது - என்றார்.


# மீண்டும் சிக்குன்குனியா

சத்தியமங்கலம், டிசெ. 17

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தை சுற்றியுள்ள கிராமங்களில் சிக்குன்குனியா நோய் பரவி வருகிறது.

சுகாதாரக்குழு அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து, நோய் மேலும் பரவாமல் தடுக்க வேண்டும் என கிராம மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில், கடந்த ஒரு மாதமாக வைரஸ் காய்ச்சல், வாந்தி, வயிற்றுப் போக்கு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு தினமும் 200 பேர் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். காய்ச்சல் வந்த பலருக்கு மூட்டுவலி, உடல்வலி ஏற்பட்டு அவதிப்பட்டனர். அவர்களைப் பரிசோதித்ததில் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது.



ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீகாகுளத்தில் நேற்றுமுன்தினம் இரவு தீப்பந்தம் ஏந்தி ஊர்வலம் சென்றனர். அதன்போது.....

# தனித் தெலுங்கானா விவகாரத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்க மாட்டோம்

## மத்திய அரசு உறுதி



கொல்கத்தா, டிசெ. 17

தெலுங்கானா விவகாரத்தில் அவசரப்பட்டு முடிவு எடுக்க மாட்டோம் என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. ஆந்திராவில் நிலைமைகள் சீரான பின்னரே தெலுங்கானா விவகாரம் தொடர்பாக பேச்சை மத்திய அரசு தொடங்கும் - என்று மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

இதுகுறித்து கொல்கத்தாவில் அவர் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

இப்போதைய நிலையில் தெலுங்கானா பற்றி முடிவு செய்யப்படவில்லை. தெலுங்கானா விவகாரத்தில் அவசரப்பட்டு முடிவு எடுக்க மாட்டோம் என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. ஆந்திராவில் நிலைமை இப்போது பதற்றமாக உள்ளது. நிலைமைகள் சீரான பின்னரே தெலங்கானா விவகாரம் தொடர்பாக பேச்சை மத்திய அரசு தொடங்கும். இப்போது மத்திய அரசு ஏதாவது கூறினால் நிலைமை மேலும் பதற்றமாகும். ஆந்திர சட்டப்பேரவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

இதனிடையே, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் 5 நாள் மாநாடு கொல்கத்தாவில் இன்று தொடங்குகிறது. இதில் தெலுங்கானா விவகாரம் பற்றி விவாதிக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் தேவப்பிரதா பிஸ்வாஸ் கூறியுள்ளார்.

# மீனவரின் கோரிக்கையை நிறைவேற்றக்கோரி ராமேஸ்வரத்தில் நாளை மார்க்சிஸ்ட் மாநாடு!

## செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, டிசெ.17

மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்றக்கோரி இராமேஸ்வரத்தில் நாளை 18 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி சார்பில் மாநாடு நடத்தப்படும் - என்று அக்கட்சியின் மாநில செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் என்.வரதராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழுக் கூட்டம் 13, 14 ஆம் திகதிகளில் மாநிலச் செயற்குழு உறுப்பினர் பி.சம்பத் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு -

* தமிழ்நாட்டைப் பிரிவினை செய்ய வேண்டும் என்ற கருத்து மிக ஆபத்தானது. சிறிய மாநிலங்கள் அமைப்பது என்ற பெயரில் மாநிலங்களைப் பிரிப்பது இந்திய மக்களிடையே தேவையற்ற பிணக்குகளையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்தவே வழி வகுக்கும் என்பதே நடைமுறை அனுபவம். எனவே, தமிழ்நாட்டை இரு மாநிலங்களாக பிரிவினை செய்ய கோருவது தேவையற்றது.

* மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய - மாநில அரசுகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக டிசெம்பர் 18 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் 'மீனவ மக்களின் வாழ்வுரிமை மாநாடு'' நடைபெறும் - என்றுள்ளது.

# ஹிந்தி நடிகர்களைக் கொல்ல தீவிரவாதிகள் சதித் திட்டம்!

## அமெரிக்காவில் கைதான ஹெட்லி அதிர்ச்சித் தகவல்

வாஷிங்ரன், டிசெ.17

ஹிந்தித் திரைப்பட முன்னணி நடிகர்கள் மற்றும் பால் தாக்கரே உள்ளிட்ட சிவசேனா தலைவர்களைக் கொல்ல லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என அமெரிக்காவில் கைதான தீவிரவாதி ஹெட்லி தெரிவித்தார்.

பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்ட அமெரிக்க வாழ் தீவிரவாதிகளான டேவிட் கோல்மேன் ஹெட்லி மற்றும் தாவூர் உசைன் ரானா ஆகிய இரண்டு பேரையும் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் கடந்த ஒக்டோபர் மாதம் கைதுசெய்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தியபோது 'லஷ்கர் இ தொய்பா' தீவிரவாதிகளுடன் அவர்களுக்கு உள்ள நெருக்கம் தெரியவந்தது.

இந்நிலையில், சிகாகோ நீதிமன்றில் அந்த தீவிரவாதிகள் மீது 10 பக்க குற்றப்பத்திரிகையை எப்.பி.ஐ. அதிகாரிகள் தாக்கல் செய்தனர். அதில், இந்தியாவில் லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ள மேலும் பல இலக்குகள் பற்றிய அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதன்படி, குஜராத் மாநிலத்தில் உள்ள புகழ் பெற்ற சோம்நாத் கோவிலை தகர்க்கவும் ஹிந்தி திரைப்பட நடிகர்கள் மற் றும் சிவசேனா கட்சியின் தலைவர்களைக் கொல்லவும் தீவிரவாதிகள் சதி செய்துள்ளனர்.

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வரவேற்று ஆதரிப்பதாக விடுதலைச் சிறுத்தைகள் அறிவிப்பு

சென்னை,டிசெ. 17

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை - நாடு கடந்த தமிழீழ அரசை விடுதலைச் சிறுத்தைகள் முழுமையாக வரவேற்று ஆதரிக்கிறது. அத்துடன், தமிழகத்திலும் அத்தகைய பொதுவாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக விடுதலைச்சிறுத்தைகள் முன்முயற்சிகளை மேற்கொள்ளும் - என்று அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தமிழீழம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உலகெங்கும் பரந்துவாழுகின்ற புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள், தங்களுக்கான நாடுகடந்த தமிழீழ அரசு தொடர்பாக ஆங்காங்கே பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்திவருகின்றனர்.

அத்துடன், ஈழத்தந்தை செல்வா காலத்தில் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் இன்றைய புலம்பெயர்ந்த தமிழர்களின் மன நிலையை அறியும்பொருட்டும் பொதுவாக்கெடுப்பு நடந்து வருகிறது.

அண்மையில் நோர்வே மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பல்லா[illegible]ரக்கணக்கான மக்கள் பங்கேற்று வாக்களித்துள்ளனர்.

நோர்வேயில் 98 வீதம் மற்றும் பிரான்ஸில் 99 வீதம் பொதுமக்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளனர். அதாவது, ஈழத்தமிழர்களுக்கு நிலையான பாதுகாப்பு தமிழீழ விடுதலை மட் டுமே என்பதை மீண்டும் மக்கள் இத்தகைய வாக்கெடுப்பின் மூலம் மறுஉறுதி செய்துள்ளனர்.

ஈழச்சிக்கலுக்கு ஒரே தீர்வு - இறுதித் தீர்வு தமிழர்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான தமிழீழ விடுதலை மட்டுமே!

இத்தனை இழப்பிலும் ஈழமக்கள் சோர்வடையாமல், சலிப்படையாமல், தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாகவுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தங்களுக்குள் வாக்கெடுப்பு நடத்தி தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியிருப்பது மிகுந்த ஆறுதளிக்கிறது.

ஈழத்தமிழினத்தின் இந்த உறுதிமிக்க உணர்வுகளை- விடுதலைவேட்கையை, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் யாவும் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். தமிழீழத் தேவையை இந்திய அரசு புரிந்து கொள்வதோடு அதனை அங்கீகரிக்கவும் முன்வரவேண்டும். - என்றுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# குண்டுதுளைக்காத ஆடைகள் வாங்க நக்ஸல் இயக்கத்தினர் தீவிர முயற்சி

புதுடில்லி, டிசெ.17

தேடுதல் வேட்டையில் ஈடுபடும் படையுடன் மோதுவதற்காக தங்கள் இயக்கத்தின் தலைவர்களுக்கு துப்பாக்கிக் குண்டு துளைக்காத ஆடை மற்றும் நவீன ஆயுதங்கள், வெடிமருந்துகளை வாங்குவதற்கு நக்ஸலைட்டுகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து அரசு வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு -

பொலிஸ் நிலையங்கள் மற்றும் அரசு அலுவலகங்களைத் தாக்கி ஆயுதங்களை கொள்ளையடித்து அவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்திய நக்ஸலைட்டுகள் இப்போது தங்களது உத்திகளை மாற்றிக் கொண்டுள்ளனர். இயக்கத்தின் தலைவர்களைப் பாதுகாக்க குண்டுதுளைக்காத ஜாக்கெட்டுகளை வாங்கவும் வெளிநாடுகளில் இருந்து கள்ளத்தனமாக ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் நவீன தொலைத் தொடர்பு கருவிகளை வாங்கவும் முயற்சி செய்து வருகின்றனர்.

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி விமான நிலையத்துக்கு சமீபத்தில் கடத்திவரப்பட்ட நவீன தொலைத்தொடர்பு கருவிகள் பறிமுதல் சம்பவம் தொடர்பாக டில்லியைச் சேர்ந்த கட்டுமான நிறுவனத்தில் பொலிஸார் அதிரடிச் சோதனை நடத்தினர். அப்போது கைது செய்யப்[illegible] விசாரணையில் மேற்கண்ட திடுக்கிடும் தகவல் கிடைத்துள்ளது.

பீகார், ஜார்கண்ட், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் செயற்படும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சீனாவில் இருந்து கடத்தி வரப்பட்ட நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஏ.கே. ரக துப்பாக்கி[illegible] மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அதிகம் பயன்படுத்துகின்றனர். கடந்த ஆண்டு நடத்திய தேடுதல் வேட்டையின்போது 92 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள், 18 ஏ.கே. 56 ரக துப்பாக்கிகள், பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கி[illegible] தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய அனுமதிக்கான நேர்முகப்பரீட்சை

## யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு நிலையங்களிலும்

அச்சுவேலி, டிசெ.17

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் அடுத்த வருடம் புதிய மாணவர்களின் அனுமதிக்கான நேர்முகப்பரீட்சைகள் வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய நான்கு நிலையங்களில் 23 ஆம் திகதி முதல் 6 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் அடுத்த வருடம் தமிழ் மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம், இந்து சமயம், கிறிஸ்தவ சமயம்,விவசாயம் ஆகிய பாட நெறிகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப் படவுள்ளனர்.

நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புப் கடிதங்கள் கிடைக்கப்பெற்றவர்கள் வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் ஆவணங்களுடன் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கால அட்டவணையின் பிரகாரம் பரீட்சை நடைபெறும் என கே.பேர்ணாட் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைகள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 23 ஆம், 24 ஆம் திகதிகளிலும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 28 ஆம், 29 ஆம் திகதிகளிலும், கொழும்பு ஹமீட் ஆல் ஹுசைன் தேசிய பாடசாலையில் 23 ஆம் திகதியும், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் ஜனவரி 5 ஆம் திகதியும் நடைபெறும் என்று பீடாதிபதி கே. பேர்ணாட் அறிவித்துள்ளார்.

விஞ்ஞான பாட நெறிக்கு (கிளிநொச்சி மாவட்டம்) வெட்டுப்புள்ளி 0.0194, கிறிஸ்தவபாடத்துக்கு வெட்டுப் புள்ளி 0.5151 -

முல்லைத்தீவு மாவட்டம் கிறிஸ்தவ சமய பாடநெறிக்கு 0.5085 மேற்படி புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் கிடைக்காவிட்டாலும் தமக்கு வசதியான நிலையத்தில் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகம் தரலாம் என. அறிவிக்கப்பட்டுள்ளது.நேர்முகப் பரீட்சை தொடர்பாக மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் 024 222 2272 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## ஞாயிறன்று தகவல் தொழில் நுட்பப் பரீட்சை

யாழ்ப்பாணம் டி.செ.17

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்பப் பரீட்சை (GIT) எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதிஅட்டைகள் கல்வி வலயங்களுக்குக் வந்து சேர்ந்துள்ளன என்றும் இடம் பெயர்ந்த மாணவர்கள் தமக்கான அனுமதி அட்டைகளை தாம் விண்ணப்பித்த பாடசாலை அதிபர்களிடம் இன்று பிற்பகல் அல்லது நாளை காலை பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாம வலயப் பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை இன்று தமது வலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-7)

## சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை, அராலி மேற்கு, கோட்டைக்காடு நொச்சியம்பதி அருள்மிகு சித்தி விநாயகப் பெருமான் ஆலய கும்பாபிஷேக மண்டல மஞ்சன அபிஷேக 48ஆம் நாள் பூர்த்திவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும். அன்றைய தினம் 1008 மஹா சங்காபிஷேகம் இடம்பெறும். (ஒ)

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க இன்று இறுதிநாள்

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கும் மற்றும் இடம்பெயர்ந்து இங்கு வந்துள்ள வாக்காளர்கள் தபால் மூலம் விண்ணப்பிப்பதற்கான முடிவுதிகதி இன்றுடன் நிறைவுபெறுகிறது என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்புகின்ற வாக்காளர்களிடம் இருந்தும், இடம்பெயர்ந்த வாக்காளர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கு நேற்று புதன்கிழமை வரை 2 ஆயிரத்தது788 பேர் விண்ணப்பித்துள்ளனர். இடம்பெயர்ந்த வாக்காளர்களில் 822 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளனர். (ஒ - 9)

# வன்னிப்பகுதி தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை

## சம்பந்தப்பட்டோர் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

வன்னிப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வன்னிப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றிவந்த பலர் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்து நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் தொடர்ந்தும் சேவையாற்றிவருகின்றனர்.

தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றியவர்களுக்கு அண்மையில் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு , வவுனியா ஆகிய மாவட்டங்களில் பணியாற்றியவர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நிரந்தர ஆசிரிய நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் தொடர்ந்தும் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வரும் இடம்பெயர்ந்தோருக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் கிடைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ - 16)

# அரச ஊடகங்களைக் கண்காணிப்பதற்கு தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்குக

## தேர்தல் ஆணையாரிடம் எதிரணி வற்புறுத்தல்

கொழும்பு, டிசெ.17

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்குமாறு எதிர்க்கட்சிகள்தேர்தல் ஆணையாளரிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐக்கியதேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவர்கள் நேற்றுக் காலை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவை தேர்தல் ஆணையகத்தில் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரகாலத்தில் அரச ஊடகங்களைக் கண்காணிப்பது தொடர்பாக பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு எதிர்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச்சந்திப்பில் வலியுறுத்தினர்.

சட்டவிரோத தேர்தல் 'கட்- அவுட்'களை அகற்றுவது உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

# கடலுணவுகளின் விலை அதிகரிப்பு

வடமராட்சி, டிசெ.17

யாழ்.குடாநாட்டில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதனால் மீனவர்கள் குறைந்த எண்ணிக்கையில் கடலுக்குச் சென்றமையால் கடலுணவு வகைகளுக்கு சந்தைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அவற்றின் விலைகளும் அதிகரித்துக் காணப்பட்டன.புயல் அபாயம், கடும் மழை தொடர்ந்து இருப்பதால் மீனவர்களைக் கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாம் என பொலிஸாரும் மற்றும் அரச தரப்பும் அறிவித்திருந்தன. இதனையடுத்து மீனவர்களில் பெரும்பாலானோர் கடற்றொழிலுக்குச் செல்லாது தத்தமது வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.

இதனால்சந்தைகளில்கருவாடு வகைகளுக்கும்,கோழி,ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி வகைகளுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மீன் மற்றும் கருவாடு வகைகளின் விலைகள் உயர்ந்துள்ளன. மாடு, ஆடு,கோழி இறைச்சி வகைகளின் விலைகள் வழமைபோல இருப்பினும் மழை காரணமாக இவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (50-236)

# மணற்காடு, சக்கோட்டைப் பகுதிகளில் 393 குடும்பங்கள் இடம்பெயர்வு

## அவர்கள் தேவாலயங்களில் தஞ்சம்

பருத்தித்துறை,டிசெ.17

கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழை காரணமாக மணற்காடு, சக்கோட்டைப் பகுதிகளில் இருந்து சுமார் 393 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அங்குள்ள தேவாலயங்களில் தங்கியுள்ளனர்.

மணற்காடு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 353 குடும்பங்களைச் சேர்ந்தோர் அங்குள்ள தேவாலயத்தில் தங்கியுள்ளனர். அவர்களுக்கான சமைத்த உணவை மருதங்கேணி உதவி அரச அதிபர் நேற்று முன்தினம் பிற்பகல் தொடக்கம் வழங்கி வருகிறார். சக்கோட்டையில் இருந்து இடம்பெயர்ந்த 40 குடும்பங்களைச் சேர்ந்தோர் அங்குள்ள தேவாலயத்தில் தங்கியுள்ளனர். அவர்களுக்குத் தேவாலய அருட்தந்தையால் நேற்றுமுன்தினம் சமைத்த உணவு வழங்கப்பட்டது. நேற்று அந்தப் பொறுப்பை அந்தப்பகுதிக் கிராம சேவையாளர் பொறுப்பேற்றுள்ளார்.

### ஊரெழு பொக்கணை நீரூற்று பீறிடுகிறது

இதேவேளை, கடந்த இரண்டு நாள்களாகப் பெய்த மழை காரணமாக ஊரெழு, பொக்கணை நீரூற்று பீறிட்டுப் பாய்கின்றது. இதனால் அப்பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து நீரூற்றுக்கு அண்மையாக உள்ள தாழ்நிலப்பகுதி மக்கள் தமது உடைமைகளை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.கடந்த வருடம் ஏற்பட்ட நிஷா புயல், மழையின் போதும் இந்த நீரூற்று பீறிட்டுப் பாய்ந்து அப்பிரதேசதில் சுமார் ஐந்து அடிக்கு வெள்ளம் நீர் தேங்கி மக்களைப் பெரும் அவலத்திற்கு உள்ளாக்கியிருந்தது.

(ஒ-7-10-72-190)

# லங்கா சிமெந்து ஊழியர் நாளை சம்பள நிலுவையைப் பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ.17

லங்கா சிமெந்து நிறுவனத்தில் கடமை புரிந்த ஊழியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவு நாளை வெள்ளிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் உள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தொழில் ஆணையாளர் நாயகத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து சம்பள நிலுவைக் கொடுப்பனவு உரிய நிறுவனத்திடம் இருந்து அறவிட்டு யாழ்.மாவட்டத் தொழில் அலுவலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே ஊழியர்கள் ஐம்பது ரூபா பெறுமதியுடைய முத்திரையுடன், ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டையையும், குறித்த நிறுவனத்தில் கடமை புரிந்ததற்கான சான்றுகள் இருப்பின் அவற்றையும் எடுத்துவந்து குறித்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க இடம்பெயர்ந்ததோர் ஆர்வம் இல்லை

## 822 பேர் மட்டுமே இதுவரை விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

ஜனாதிபதித் தேர்தலில் யாழ்.மாவட்ட தொகுதிகளில் இருந்து வாக்களிப்பதற்கு இடம்பெயர்ந்த வாக்களர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.இடம் பெயர்ந்த வாக்காளர்கள் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உள்ளபோதிலும் 822 பேர் மட்டுமே வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இது விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:- ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தற்போது வசிக்கும் பகுதியில் வாக்களிப் பதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இதில் வாக்களிக் கத்தகுதியுடைய இடம்பெயர்ந்த வாக்காளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எனினும் இடம்பெயர்ந்த வாக்காளர்களில் 822 பேர் மட்டுமே வாக்களிப்பதற்காக விண்ணப்பித்துள்ளனர். இதற்கான விண்ணப்ப முடிவுதிகதி இன்றாகும். (ஒ-9)

# கரவெட்டிப் பகுதிக்கான தனியான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

## ஜனவரி முதல் இயங்க ஆரம்பிக்கும்

வடமராட்சி,டிசெ.17

கரவெட்டிப் பகுதிக்கென தனியான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இயங்கத் தொடங்கவுள்ளது.

கரவெட்டி அரசடி தச்சன் தோப்பு வீதியில், முன்னர் கரவெட்டி பிரதேச அரசினர் வைத்தியசாலை இயங்கிய கட்டடத்தில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை,கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரிவுகளுக்கான பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மட்டுமே இயங்கி வந்தது. தற்போது கரவெட்டிப்பிரிவுக்கென தனியான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும் மு.ரவிச்சந்திரன் தலைமைப் பொது சுகாதார பரிசோதகராகவும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு பி.பாலதேவா தலைமை சுகாதார பரிசோதகராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை: கடந்த சில வருடங்களாகத் துஷ்பிரயோகம்

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

கடந்த சில வருடங்களாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகின்றது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீரவின் புதிய இணையத்தளத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் முக்கிய சில சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்த அவர் -

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரசியல் சாசனத்தை அமைக்காததன் மூலம் அரசியல் சாசன சட்ட திட்டங்கள் மீறப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிபதிகள், பொலிஸ் மா அதிபர், சட்ட மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், நாடாளுமன்றச் செயலாளர் போன்ற பதவி நியமனங்கள் சட்டத்திற்கு முரணான வகையில் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்று அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போதைய ஜனாதிபதி மீளவும் தெரிவு செய்யப்பட்டால் பாரிய சட்டச் சிக்கல்கள் உருவாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேர்தல் நடைபெறுவதனால், ஆட்சிக் காலம் குறித்து அரசியல் சாசன அடிப்படையில் பல்வேறு குழப்ப நிலைமைகள் உருவாகும் எனவும் - வரலாற்றுக் காலம் முதலே இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் முறைமைகள் காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-சி)

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியாகும்

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தகவல்

கொழும்பு, டிச. 17

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என மேற்படி கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

மகாவலி மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி அடங்கலான பல எதிர்காலத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர் -

33 கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் இம்முறை பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதற்குச் சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இதற்கான தேர்தல் குழுக்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

இதேவேளை வீடு வீடாகச் சென்று இவர்கள் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பர் எனவும் 2005இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைவிட சிறந்த முறையில் இம்முறை தேர்தல் பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் உள்ள 1,800 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (அ-சி)

### கிறிஸ்மஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம், ஆஸ்திரேலியா மனித உரிமைகளை மீறுகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த முகாமில் தங்கியிருப்பதன் காரணமாக அங்குள்ளவர்கள் மனநோய்களுக்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளது எனவும் கிரஹம் தோம் குறிப்பிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதாக 60 படகுகளில் சென்ற 2 ஆயிரத்து 800 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

### ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயாதீனமாகக் கண்காணிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணம் குறித்து விசேட கவனத் தைச் செலுத்தவுள்ளோம்.

தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளினது வேட்பாளர்களும் நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கப் போகிறார்கள் எனக் குறிப்பிட்டு அதற்கான யோசனைகளை முன்வைத்துள்ளனர்.

இது, முன்னெடுக்கப்பட வேண்டிய - நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய - விடயம்தான்.

முப்பது வருட கால யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்த முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த சரத் பொன்சேகாவும் யுத்த வெற்றிக்குத் தாமே காரணம் என்ற கோஷத்தை முன்வைத்துப் பிரசாரங்களை மேற்கொண் டுள்ளனர்.

இதன் காரணமாக இந்தத் தேர்தல் இருவருக்குமே சவாலாக அமையப் போகின்றது.

இந்தக் காரணத்தினால் இத் தேர்தல் வன்முறை மிகுந்ததாகவும், அமைதியான முறையில் இடம்பெறாததாகவும் அமையப் போகின்றது. இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தென்படுகின்றன.

தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் வாக்களிப்பதற்குப் பலருக்கும் உள்ள உரிமை பறிபோகப் போகின்றது.

சுயாதீன அமைப்பென்ற வகையில் தேர்தல் ஆணையாளரின் விசேட கவனத் திற்கு இந்த விடயத்தைக் கொண்டுவரப் போகின்றோம்.

நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்தி, நல்லாட்சியை உறுதிசெய்யும் நோக்குட னேயே அரசமைப்பின் 17 ஆவது திருத் தம் கொண்டுவரப்பட்டது.

எனினும், இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக அரச கட் டமைப்புகள் அரசியல் மயப்படுத்தப்பட் டுள்ளன.

தேர்தலும், ஊடகங்களும் துஷ்பிரயோகத்திற்குள்ளாகலாம். இதனால் ஜனநாயகத் தேர்தல் குறித்த நம்பிக்கைகள் குறைவடைந்துள்ளன.

இந்த நிலைமையைச் சரிசெய்வதற்காக மக்களின் விழிப்புணர்வைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம்.

இதுவரை நடைபெற்று முடிந்த சகல தேர்தல்களிலும் அரச ஊடகங்களும் பொதுச் சொத்துகளும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன. இதுபற்றிக் கவனம் செலுத்த வேண்டும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்.வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமையாளர் லிப்னிஸ் பமுனு குல ஆராச்சி தெரிவித்துள்ளார். இதன்காரணமாக நேற்றைய தினம் 12 பஸ்களை போக்குவரத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தினம்தோறும் காலை 5 மணிமுதல் மாலை 6 மணி வரை பஸ் ஆசனங்களை பதிவுசெய்ய முடியும் எனவும் தெரிவித்த அவர், புதுக்குடியிருப்பிலிருந்து அனுராத புரம் வரை இ.போ.சபை பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு முள்ளியவளை இராணுவ முகாமிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும். கூறினார். (சி)

### விக்கிரமபாகுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு-13, மெசெஞ்சர் வீதியிலுள்ள 'பிரைட்டன் இன்' மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இக்கூட்டம் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

### வேட்புமனுத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 18 அரசியல் கட்சிகளின் சார்பிலும் ஐந்து சுயேச்சை வேட்பாளர்களின் சார்பிலும் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

நேற்று ஐக்கிய ஜனநாயக முன்னணி கட்சியின் வேட்பாளர் சிறிகமகே கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

பிரதான கட்சிகள் முன்னதாகவே கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தன என்பது தெரிந்ததே.

இன்று காலை ஒன்பது மணிமுதல் பதினொரு மணிவரை வேட்புமனுக்கள் வேட்பாளர்களிடமிருந்து ஏற்கப்படவுள்ளன எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் ஆட்சேபனை மனுக்களையும் தாக்கல் செய்யமுடியுமெனவும் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்காகத் தேர்தல் செயலகத்திற்கு வரும் வேட்பாளர்கள் அதிக எண்ணிக்கையான ஆதரவாளர்களை அழைத்து வரவேண்டாமெனத் தேர்தல் செயலகம் கோரியுள்ளது.

இதேவேளை, தேர்தல் செயலகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் தேர்தல் செயலகத்தை நோக்கிப் பல பகுதிகளிலிருந்தும் கட்சிகளின் ஆதரவாளர்கள் பயணிக்கக்கூடுமென்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படலாம் என எச்சரித்துள்ள போக்குவரத்துப் பொலிஸார் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துமாறு மக்களைக் கோரியுள்ளனர். (அ)


**வீடு வாடகைக்குத் தேவை**

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பம் ஒன்று வசிப்பதற்கு குறைந்தது 3 அறைகளைக் கொண்ட வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 0777531461, அல்லது 0777177592


### தேர்தல் செயலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரகாரம் இன்று காலை 9 மணி முதல் ஆயுர்வேதச் சந்தி, மாமரச்சந்தி, ஹொரணைச் சந்தி, நாவலகொஸ்வத்த சந்தி என்பன மூடப்படும் எனத் தெரிவித்துள்ளார். எனவே, இந்த வீதிகளைப் பயன்படுத்துபவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து பத்தரமுல்லை செல்லும் வாகனங்கள் பேஸ்லைன் வீதி, நாரஹேன்பிட்டிய, நாவல வீதி ஆகியவற்றை மாற்று வீதிகளாகப் பயன்படுத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று பத்தரமுல்லையிலி ருந்து கொழும்பு நோக்கி வரும் வாகனங்கள் குரணைச் சந்தியிலிருந்து கோட்டே பகுதியூடான பாதையைப் பயன்படுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஐ.எம். கருணாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தேர்தல் செயலகம் அமைந்துள்ள பிரதேசம் தற்போதிலிருந்து அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாகக் கருதப்படுவதனால் அந்தப் பகுதியில் பயணிக்கும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் பாதசாரிகளும் சோதனைக் குட்படுத்தப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் பதிவுசெய்யப்படும் இன்றைய தினம் ஏழாயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

### யாழ்.வருவதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவில்லை. மழைபெய்யும் பொழுதும் ஒதுங்க இடமில்லாத நிலையும், வரிசையை விட்டு நீங்கினால் அந்த இடத்தை ஏனையவர்கள் ஆக்கிரமித்துக் கொள்வார்கள் என்பதால் தொடர்ந்தும் வரிசையில் நிற்கவேண்டியேற்படலாம் என்பதனால் மழையில் நனைந்த வண்ணம் காத்திருக்கும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. சேறும் சகதியுமான இடத்தில் நீண்ட நேரம் காத்திருப்பதால் பலருக்கு நீர்ச்சிரங்குத் தொற்று நோய் ஏற்பட்டு கால் கடுக்க நிற்பதைக் காணமுடிகிறது.

அவர்கள் அதிகாலை முதலே வரிசையில் நின்றாலும் அவர்களுக்குப் பயண அனுமதி வழங்குவதற்குக் காலை 7 மணிக்குப் பின்பே படைத்தரப்பினர் வருகை தருவதாகவும், ஓர் இராணுவ வீரர் மட்டுமே கடமையிலிருந்து அவர்களது உடைமைகளைச் சோதனை செய்து பின்னர் உள்ளே செல்ல அனுமதிப்பதையும் காணமுடிகிறது.

இதுதவிர ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் பயண அனுமதிச் சீட்டுப்பெற விருப்பதனால், வரிசையில் ஒழுங்காக நிற்குமாறு கூறி இராணுவத்தினரால் பத்துவயதுக் குழந்தைகள் தொடக்கம் வயோதிபர் வரை தடி, கொட்டன்,செயின் என்பவற்றினால் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுகின்றமை சர்வசாதாரண மாக நிகழ்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணம் வருவதற்குக் காத்திருக்கும் ஆயிரக் கணக்கான மக்களின்இந்தஅவலத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டும் காணாதவர்களாக அசிரத்தை காட்டுவதாக கால்கடுக்கக் காத்திருக்கும் பயணிகள்பலர் உதயனிடம் விசனம் தெரிவித்தனர். (அ-07)


**வெளிவந்துவிட்டது**

நுண்கலைப்பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்தல். போட்டிப் பரீட்சை வழிகாட்டி தொகுப்பு

த.தவசேகர்

பெற்றுக்கொள்ள முடியும்.


### இடியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடும் காற்றினால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்ந்தும் நிலவும் என்றும்

அங்கு பல பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை மாலை நேரங்களில் பெய்வதுடன் தென்மேற்கு கரையோரப்பகுதிகளில் காலநிலை பாதகமாகக் காணப்படும். இடி மின்னல் ஏற்பட்டு இடத்திற்கிடம் கடும் காற்று சிறிது நேரம் வரை விட்டுவிட்டு வீசும்.இதனால் மக்களை அவதானமாக இருக்கும்படியும் வளிமண்டலத் திணைக்களம் கேட்டுள்ளது.நேற்று மாலை 4 மணியளவிலிருந்து அடுத்து வரும் 36 மணி நேரத்தில்

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் விட்டுவிட்டுமழை பெய்யும் என்றும்,திருகோணமலை,மட்டக் களப்பு மாவட்டத்தில் பிற்பகலிலும் மாலையிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும்- கொழும்பில் காலை வேளையில் லேசான மழை பெய்வதுடன் பிற்பகலிலும் மாலையிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் -வளிமண்டலத் திணைக்களம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

இடி மின்னலால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்கும் பொருட்டு மக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-10)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவம் குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் தனியாக விசாரணையொன்றை மேற்கொண்டு வருகின்றமையை நாங்கள் அறிவோம்.இதற்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்குகின்றது. அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் அச்சுறுத்தப்படுவது உட்பட மனித உரிமை மீறல்கள் முடிவிற்குக் கொண்டு வரப்படுவதன் அவசியத்தை இலங்கை அரசிற்கு நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

கடந்தகால துஷ்பிரயோகங்களுக்குக் காரணமானவர்களை விசாரணை செய்வது, பொறுப்புக் கூறவைப்பது, தமிழர்கள் உட்பட சிறுபான்மை சமூகத்தவர்களுடன் அர்த்தபூர்வமான பேச்சுகள் மற்றும் ஒத்துழைப்பை மேற்கொள்வது போன்றவற்றின் அவசியத்தையும் வலியுறுத்தி வருகிறோம். - என்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சசிகரன் சியாமளா



அல்வாயைப் பிறப்பிடமாகவும் மாலிசந்தி தம்பி ஒடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிகரன் சியாமளா 14.12.2009 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி சிவராஜாவின் அன்பு மகளும், மகாலிங்கம் சசிகரனின் அன்பு மனைவியும், சுயாதா (கொலண்ட்),சுபாஜினி, சுஜிதா, சுஜீவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெய்வேந்திரன், லோகநாதன் ஆகியோரின் மைத்துனியும், கோபி, அஜந்தன், பிறிஸ்ரில்லா, அபிநயா, அபிஷாயினி, அக்ஷாயினி ஆகியோரின் அன்ரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பி ஒடை,*
*வதிரி, மாலி சந்தி, கரவெட்டி.*

(91000) தகவல்: குடும்பத்தினர்
திரு.திருமதி சிவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.